விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
TCN EXPRESS
208, GALLE ROAD, COLOMBO-6.
321, K.K.S.ROAD, JAFFNA.
MAIN STREET, MANNAR.
T.P: 0777 554528
(363)

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 278 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை (22.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜனாதிபதித் தேர்தல் 2024



# முன்னிலையில் அநுர குமார

(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் கிடைக்கப்பெற்ற தபால்மூல வாக்குப் பதிவுகளின்படி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் உள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

காலை 6 மணி வரை

## ஊரடங்கு சட்டம் அமுல்

(கொழும்பு)

நாட்டில் நேற்றிரவு 10 மணி முதல் இன்று காலை 6 மணி வரை நாடளாவிய ரீதியாக பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள 19

திங்கட்கிழமை

## அரசாங்க விடுமுறை

(கொழும்பு)

நாளை 23ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரசாங்க விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்ட 19

## 72 வீதங்களுக்கு மேல் நாடு முழுவதும் வாக்குகள் பதிவு

(கொழும்பு)

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித்தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணியுடன் நிறைவடைந்தது.

நாடளாவிய ரீதியில் 72 சத வீதம் வாக்குப் பதிவு இடம் பெற்றுள்ளதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாடு முழுவதிலும் உள்ள சில மாவட்டங்களில் பதிவான வாக்கு வீதங்களின் சதவீதம் கீழே,

யாழ்ப்பாணம் 66.98%, கிளிநொச்சி 68%, முல்லைத்தீவு 71 % மன்னார் 72%, நுவரெலியா 80%, 19

உலங்குவானூர்தி மூலம்

## நெடுந்தீவிலிருந்து வாக்குப் பெட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலங்கு வானூர்தி மூலம் நெடுந்தீவிலிருந்து வாக்குப் பெட்டிகள் நேற்று யாழ்ப்பாணத் துக்கு எடுத்து வரப் பட்டது. 19



## மறவன்புலவில் மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

மறவன்புல கடலபகுதியில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனங்கிளப்புபகுதி 19

## பாராளுமன்றம் கலைக்கப்படலாம் பொதுத் தேர்தலுக்குத் தயாராகுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி, பாராளுமன்றத்தை கலைத்தால்பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்குமாறு அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும்தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதியின் நியமனத்தின் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலின்பின்னர் பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் அந்தந்த அரசியல் கட்சி 19

## யாழ்.போதனாவில் மாடியிலிருந்து தவறிவிழுந்த யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நான்காம் மாடியில் இருந்து தவறி விழுந்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

## காணாமல்போன ஆசிரியர் நேற்று சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தத்தின்போது கடலில் காணாமல்போன வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான 19

## நீர்வேலியில் வீடு எரிந்ததில் தனிமையிலிருந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் வீடு எரிந்ததில் தனிமையில் இருந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இச்சம்ப 19

## வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல்

### தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் என 2024 ஜனாதிபதித் தேர்தல் பதிவு செய்யப்பட்டது எனத் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எந்த வன்முறையும் இடம்பெறாத மிகவும் அமைதியான தேர்தல் இதுவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

## கட்டுநாயக்கவில் கடும் பாதுகாப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

அத்துடன் சுமார் 200க்கும் அதிகமான விமானப் படையினர் விமான நிலையத்தை அண்டிய பிரதேசங்களில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில்
Beauty Parlor நடாத்த
தளபாடங்களுடனும்
Cakes, Icing ஓடர்கள்
செய்ய உபகரணங்களுடனும்
இடம் வழங்கப்படும்.
0742170383
மகளிருக்கு மட்டும்

## டொச் வகுப்புகள்

German, Swiss
செல்வோரிற்கு Deutsch A-1
பரீட்சைக்கான வகுப்புகள்
யாழ். நகரில் ஆரம்பமாகின்றன.
076 062 0446

யாழ். நகரில் தையல்
வகுப்புக்கள் மகளிருக்கான சாறி
பிளவுஸ், ஷல்வார், சட்டைகள்
Lehenga skirt & blouse தைக்கும்
பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.
077 711 0383,
074 217 0383 (whatsapp)
(C-1234)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும். (1996)

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306


# ஒருவார காலத்துக்கு பேரணிகளுக்கு தடை

## பிரதி பொலிஸ் மா அதிபர்

ஒரு வார காலத்துக்கு வாகனங்களினூடாகவோ அல்லது நடை பயணமாகவோ பேரணி செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் இறுதி முடிவுகள் வெளியாகும் வரையிலான காலப்பகுதி மற்றும் அதன் பின்னரான காலப்பகுதி உள்ளடங்களாக ஒரு வார காலத்துக்கு இவ்வாறு பேரணி செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, சட்ட ஒழுங்கை பாதுகாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் நடை முறையிலுள்ள சட்டங்களை மீறும் பட்சத்தில் அதிகாரத்தை பயன்படுத்தி சட்ட ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வாக்களிப்பு நிலையத்தில் பார்வையாளராக இருந்தவர் மரணம்

இரத்தினபுரி, சீவாலி மத்திய கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் சமகி ஜன பலவேக (SJB) சார்பில் பார்வையாளராக இருந்த அறுபத்தெட்டு வயதுடைய நபர் ஒருவர் திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று காலை எட்டு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் நெஞ்சுவலி காரணமாக உடனடியாக இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவரது சுகயீனம் வாக்களிப்பு நிலையத்தின் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தவில்லை என இரத்தினபுரி மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## என்றும் மறவோம்!

அமரர் பெஞ்சமின்
ஜெபரத்தினம் நவரட்ணம்
Electrical Contractor



கொள்ளுப்பிட்டி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் தங்கள் பிள்ளைகள் சுஜந்தனும் சுகந்தனும் சபரிமலைக்கு யாத்திரை செய்த காலங்களில் ஆரம்பித்த எங்கள் ஆன்மீக அன்புத் தொடர்பு இன்றுவரை தொடரும் வேளையில் தங்கள் பிரிவு ஆழ்ந்த கவலையை அளிக்கிறது. ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ தர்மசாஸ்தாவைப் பணிகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு சார்பில்,
தங்க. முகுந்தன் (குருஸ்வாமி)
0777 279 238

தோற்றம் 21.05.1943 மறைவு 16.09.2024
(C-1235)


## நுவரெலியா மாவட்டம் வாக்களிப்பில் சாதனை

(நுவரெலியா)

இலங்கையின் 9வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நேற்றைய தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில் 80 சதவீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய முதன்முறையாக நுவரெலியா மாவட்டத்தில் வாக்களிப்பு வீதம் 80 சதவீதத்தை தாண்டியுள்ளதுடன் இது வரலாற்றில் அதிகூடிய வாக்குப்பதிவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்



மலர்வு
20.05.1936

உதிர்வு
21.09.2024

## திரு. வைத்திலிங்கம் நடராஜா
### (ஓய்வுபெற்ற மூத்த அரச கணக்காளர்)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. வைத்திலிங்கம் நடராஜா அவர்கள் 21.09.2024 சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - நாகமுத்து தம்பதியினரின்அன்பு மருமகனும் அமரர் வசந்தகோகிலா (லீலா) அவர்களின் அன்புக் கணவரும் இளங்கோ(பிரான்ஸ்), மணிவண்ணன் (பிரித்தானியா), தமயந்தி(கனடா), ஜானகி(பிரித்தானியா), வாசுகி(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ருனித்தா, விஜிதா, சிங்காரவேலன், பஞ்சகுமார், இராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சோதியா, பாநிலா, இளமாறன்(செல்வன்)-ஆதிகேசவன், குந்தவை - நிதுஷா, சௌமிகா - நிருத்திகா, பிரணவக்குமரன் - சாரண்யா, சத்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராதபுஷ்பம், விஜயலட்சுமி, காலஞ்சென்ற புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
00 94 21 222 5635
00 94 76 994 5829
(2101)

தகவல் :
பிள்ளைகள்/
கணேசு செல்வகுமார்
(பெறாமகன்) - இந்திராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவுகளின் பின்

## மனிதாபிமானத்துடன் செயற்படுங்கள்

### தேர்தல்கள் ஆணையாளர் வேண்டுகோள்

**(கொழும்பு)**

**தேர்தலில் வெற்றி பெறுபவர் எவராக இருந்தாலும் ஏனைய வேட்பாளர்களுக்கு அபகீர்த்தி ஏற்படாத வகையில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் செயற்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "நேற்று காலை முதல் வாக்களிப்பு சுமூகமான முறையில் இடம்பெற்றது.

இது நாட்டின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் தீர்மான மிக்க தேர்தலாகும். எனவே தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்பதை விட தேர்தல் வெற்றியின் பின்னர் செயற்பட வேண்டிய விதம் மிக முக்கியமாகும்.

வெற்றிபெறும் வேட்பாளர் மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு அபகீர்த்தி ஏற்படாத வகையில் ஆதரவாளர்கள் செயற்பட வேண்டியது முக்கியமாகும். சர்வதேசத்தின் ஒட்டுமொத்த கவனமும் இலங்கை மீதுள்ளது" என சமன்ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# பேச்சி அம்மன் கோயில் முற்றாக தீக்கிரை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை பேச்சி அம்மன் ஆலயம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

கல்லடி உப்போடையில் அமைந்துள்ள சிறப்புமிக்க பேச்சியம்மன் ஆலையத்தில் வெள்ளிக்கிழமை பூஜை இடம்பெற்ற நிலையில் பூஜைக்காக ஏற்றப்பட்டிருந்த விளக்கு பேச்சி அம்மனின் ஓலைக் குடிலில் பட்டு தீ பிடித்து எரிந்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

தீ பெரும் சுவாலையாக பிரகாசமாக எரியத் தொடங்கியதையடுத்து. அந்தப் பகுதி பொது மக்கள் தீயணைப்பு படையினர் ஒன்றிணைந்து தீயை சில மணி நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்த போதும் கோயில் மூலஸ்தானம் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

பேச்சி அம்மனின் சிலை ஆரம்ப காலந்தொட்டு ஓலைக் குடிலில் வைக்கப்பட்டு மிகவும் சிறப்பு வாய்ந்த தெய்வமாக பிரதேச மக்களால் போற்றப்படும் நிலையில், தீ பற்றியதை கேள்வியுற்ற அந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் படையெடுத்து கோயிலைச் சூழ்ந்து கொண்டதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் கோயில் மூலஸ்தானம் தீப்பற்றியதை கண்ணுற்ற பல பக்தர்கள் கத்தி கதறி அழுது புலம்பியும் பெரும் கவலையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியில் தபால்மூல வாக்குகள்

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| ரணில் | : 13,190 |
| சஜித் | : 6,926 |
| அநுர | : 2,303 |
| அரியநேத்திரன் | : 1,711 |

### வன்னி

| | |
|---|---|
| ரணில் | : 6,720 |
| சஜித் | : 3,681 |
| அநுர | : 1,261 |
| அரியநேத்திரன் | : 718 |

### மட்டக்களப்பு

| | |
|---|---|
| ரணில் | : 4,917 |
| சஜித் | : 4,397 |
| அநுர | : 1,521 |
| அரியநேத்திரன் | : 1,491 |

### திருகோணமலை

| | |
|---|---|
| அநுர | : 5,480 |
| சஜித் | : 4,537 |
| ரணில் | : 3,630 |
| அரியநேத்திரன் | : 431 |

### குருநாகல்

| | |
|---|---|
| அநுர | : 41,000 |
| சஜித் | : 6,050 |
| ரணில் | : 1,420 |

### கொழும்பு

| | |
|---|---|
| அநுர | : 17,889 |
| ரணில் | : 7,819 |
| சஜித் | : 7,507 |

### அநுராதபுரம்

| | |
|---|---|
| ரணில் | : 18,500 |
| அநுர | : 3,500 |
| சஜித் | : 1,850 |
| நாமல் | : 873 |

### காலி

| | |
|---|---|
| அநுர | : 25,892 |
| ரணில் | : 7,226 |
| சஜித் | : 5,338 |
| நாமல் | : 863 |

### நுவரெலியா

| | |
|---|---|
| ரணில் | : 5,950 |
| அநுர | : 5,027 |
| சஜித் | : 1,891 |

### கேகாலை

| | |
|---|---|
| அநுர | : 29,635 |
| சஜித் | : 3,456 |
| ரணில் | : 2,396 |
| நாமல் | : 2,230 |

### இரத்தினபுரி

| | |
|---|---|
| அநுர | : 19,185 |
| ரணில் | : 6,641 |
| சஜித் | : 4,675 |
| நாமல் | : 500 |

### கண்டி

| | |
|---|---|
| அநுர | : 38,923 |
| சஜித் | : 3,217 |
| ரணில் | : 989 |

### பதுளை

| | |
|---|---|
| அநுர | : 15,334 |
| சஜித் | : 11,568 |
| ரணில் | : 11,098 |

### திகாமடுல்ல

| | |
|---|---|
| சஜித் | : 13,464 |
| அநுர | : 7,081 |
| ரணில் | : 4,348 |

### மொனராகல

| | |
|---|---|
| அநுர | : 14,050 |
| சஜித் | : 5,733 |
| ரணில் | : 3,401 |

### மாத்தளை

| | |
|---|---|
| அநுர | : 9,151 |
| சஜித் | : 7,729 |
| ரணில் | : 3,301 |

### பொலநறுவை

| | |
|---|---|
| அநுர | : 11,768 |
| சஜித் | : 4,120 |
| ரணில் | : 2,762 |

### மாத்தறை

| | |
|---|---|
| அநுர | : 17,097 |
| சஜித் | : 7,108 |
| ரணில் | : 4,911 |

### புத்தளம்

| | |
|---|---|
| அநுர | : 5,788 |
| சஜித் | : 5,398 |
| ரணில் | : 2,647 |

### கம்பஹா

| | |
|---|---|
| அநுர | : 28,765 |
| சஜித் | : 11,829 |
| ரணில் | : 9,007 |

### அம்பாந்தோட்டை

| | |
|---|---|
| அநுர | : 14,482 |
| சஜித் | : 3,397 |
| ரணில் | : 2,502 |

### களுத்துறை

| | |
|---|---|
| அநுர | : 20,331 |
| சஜித் | : 8,091 |
| ரணில் | : 6,890 |

(நேற்றிரவு அச்சுக்கு போகும் வரை கிடைக்கப்பெற்ற முடிவுகள்)

## ஜாம்பவானின் சாதனையை முறியடித்த விராட் கோலி





விராட் கோலி சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின் சாதனையை தகர்த்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் சொந்த மண்ணில் அதிவேக மாக 12,000 ரன்கள் அடித்த வீரர் என்ற மாபெரும் உலக சாதனையை விராட்கோலி படைத்துள்ளார். இவர் 243 இன்னிங்ஸ்களில் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னதாக, சச்சின் டெண்டுல்கர் 267இன்னிங்ஸ்களில் 12,000 ரன்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. தற்போது விராட்கோலி புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

விராட் கோலி 243, சச்சின் டெண்டுல்கர் 267, குமார் சங்ககரா 269, காலிஸ் 271, ரிக்கி பொண்டிங் 275 இன்னிங்ஸ் முறையே தரவரிசையில் உள்ளனர். (6)

## சர்வதேச கிரிக்கெட்டில் 400 விக்கெட்டுகள் சாதனை பட்டியலில் இணைந்த பும்ரா

"400 சர்வதேச விக்கெட்டுகள்" சாதனை பவுலர்கள் பட்டியலில் இணைந்த பும்ரா!

பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 400 சர்வதேச விக்கெட்டுகள் என்ற மைல்கல் சாதனையை எட்டினார் ஜஸ்பிரித் பும்ரா.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இரண்டு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் தொடங்கி நடைபெற்றுவருகிறது. டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பந்துவீச்சை தேர்வுசெய்த நிலையில், முதலில் பட்டிங் செய்த இந்திய அணி ரவிச்சந்திரன் அஸ்வினின் தரமான சதம் மற்றும் ஜடேஜாவின் 86 ரன்கள் ஆட்டத்தால் முதல் இன்னிங்ஸ் முடிவில் 376 ரன்களை குவித்தது.

அதனைத்தொடர்ந்து விளையாடிய பங்களாதேஷ் அணி, இந்திய வேகப் பந்துவீச்சாளர்களை தாக்குபிடிக்க முடியாமல் 149 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

அபாரமாக பந்துவீசிய பும்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்த, ஆகாஷ் தீப், ஜடேஜா, முகமது சிராஜ் மூன்றுபேரும் சேர்ந்து தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினர்.



400 விக்கெட்டுகள் கிளப்பில் இணைந்த பும்ரா தன் கிரிக்கெட் வாழ்க்கையில் பிரைம் ஃபார்மில் இருந்துவரும் ஜஸ்பிரித் பும்ரா, பங்களாதேஷ்க்கு எதிரான போட்டிக்கு முன்னதாக 159 டெஸ்ட் விக்கெட்டுகள், 149 ஒருநாள் விக்கெட்டுகள் மற்றும் 79 ரி-20 விக்கெட் டுகள் என 397 விக்கெட்டுகள் என்ற எண்ணிக்கையில் களம்கண்டார்.

இந்த நிலையில் குறித்த டெஸ்ட் போட்டியில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பிறகு, சர்வதேச கிரிக்கெட்டில் 400 விக்கெட்டுகளை வீழ்த்திய 10 இந்திய வீரர் மற்றும் 6ஆவது இந்திய வேகப் பந்துவீச்சாளராக மாறி சாதனை படைத்தார். அவர் இந்த சாதனையை ஹசன் மஹ்மூத்தின் விக்கெட்டை வீழ்த்திய போது எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் மென்பொருள் பொறியியல்மாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் ஏதேனும் அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது இலங்கை திறந்த பல் கலைக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற அடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது Cambridge அல்லது Edexcel இன் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (C) சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏதாவது தகைமையைப் பெற்றிருத்தல் மற்றும் தெரிவுப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர் வரும் 08.10.2024 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021-222 3374 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(6)

# போதையில் தேர்தல் பணி

## சாரதி கைது

(கொழும்பு)

தெரணியகலை பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு பணியாளர்களை அழைத்துச்சென்ற வான் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வாக்குச் சீட்டுகள், வாக்குப்பெட்டிகள் மற்றும் பணியாளர்களுடன் தெரணியகலை பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு பயணித்த வான் சாரதி கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்குச் சீட்டுகள். வாக்குப் பெட்டிகள் மற்றும் பணியாளர்களை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். (நி)

# டொலர் கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 5,954 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாகக் கடந்த ஜூலை மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 5,652 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. (நி-6)

## சர்வதேச ஊடகங்களில்

# தலைப்புச் செய்தியான இலங்கை ஜனாதிபதித் தேர்தல்

(லண்டன்)

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்ற நிலையில் அது தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் கவனம் செலுத்தியுள்ளன. பல முக்கிய சர்வதேச ஊடகங்களின் பிரதான தலைப்புச் செய்திகளாக இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் மாறியுள்ளது. இலங்கையில் கோட்டா கோ மக்களின் போராட்டத்தின் பின்னர் புதிய தலைவரை தெரிவு செய்யும் நோக்கில் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சில செய்தி சேவைகள் அதன் தலைப்பில், "மக்கள் எதிர்ப்புகளால் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இலங்கையில் நடைபெறும் முதல் தேர்தலில் வாக்களிப்பு" என குறிப்பிட்டுள்ளது. (ஙி)

## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் - வகை II
2. யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை - வகை II
3. யா/கோப்பாய் மகா வித்தியாலயம் - வகை II

தகைமைகள்:

➢ வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** மற்றும் **தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

➢ **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம் III** அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு:

❖ விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக 2024.10.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2024(II)"** எனக் குறிப்பிடவும்.

**திருமதி. ஜமுனா ராஜசீலன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(சி-1227)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
05 - 07 - 1938



மறைவு
26 - 08 - 2024

## அமரர்.பத்மாசனி துரைராஜா

திதி - ஆவணி மாத அமரபக்க ஸப்தமி

புலோலி மத்தி கந்த உடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் சில காலம் கொழும்பில் வசித்தவரும் தற்போது 43, குமாரசாமி வீதி கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகம் (இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் - யாழ்ப்பாணம்) வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பேரம்பலம்- பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற S.P.துரைராஜாவின் (பிரதம லிகிதர் நெடுஞ்சாலை திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரமேஷ் (பொறியியலாளர்), சுரேஷ் (உதவிப் பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத்தாயாரும், பரமேஸ்வரி, லாவண்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிதுஷன் (Associate Project manager-DXDY), நிதுர்ஷிகா (Trainee Software Engineer-XONT), காவியன் ((யா/ இந்துக் கல்லூரி), தர்மிகா (யா/ இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, விஜயலட்சுமி, P.Vசண்முகநாதன் (இளைப்பாறிய பொறியியலாளர் கட்டடப்பகுதி) மற்றும் சிவகுமாரன் (இளைப்பாறிய சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான S.வேலாயுதம் (பதவி நிலை உத்தியோகத்தர்-உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்), குருநாதன் மற்றும் திலகநாயகி, றஞ்சிதமலர், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் புஸ்பவதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கிருஸ்ணகோபாலசிங்கம் (France), விஜயரட்ணம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரஸ்வதியினதும் (உடுப்பிட்டி வடக்கு), சிவபாத சுந்தரம் (கந்தர்மடம்), காலஞ்சென்ற அமராவதி (முன்னாள் ஆசிரியை-யா/ இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.09.2024 நாளை திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 25.09.2024 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வில் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

(1876)

43, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

# இராசிபலன்

22.09.2024
புரட்டாதி 06, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 9.50 மணிவரை
பரணி காலை 6.43 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 5.35 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் -அத்தம்

வளவன்

**மேஷம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்**
சில பிரச்சினையைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்**
பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மிதுனம்**
எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கன்னி**
தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**தனுசு**
கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மீனம்**
தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**உங்களின் வேலையைப் பாருங்கள், பிறரின் வேலையில் தலையிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 460



# உடைக்கப்படும் தமிழ் தேசியம்:

# பலமிழக்கும் தமிழர் தரப்பு



**“ நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு பாடமாகக் கொண்டு தமிழ் தரப்புகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவை. இல்லையேல் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியம் உடைக்கப்படும் ”**

இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் 9 ஆவது ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புகள் நிறைவுற்று வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இம்முறைத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக அமைந்துள்ளது.

இதற்கு பல காரணங்களைக் கூறிக் கொண்டாலும் இனவாதம் எனும் சொல் தெற்கு சிங்கள மக்களால் துடைத்தெறியப்பட்ட தேர்தலாகவே இத் தேர்தல் கருதப்படுகிறது.

இனவாதம்- மதவாதம் பேசுபவரை சிங்கள மக்களும் சரி, தமிழ் மக்களும் சரி, பொருட்படுத்தவில்லை என்பது தான் உண்மையானது.

இம்முறைத் தேர்தல் முடிவுகள் இதை இயலுமான வரை பறைசாற்றி நிற்கின்றதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

தவிர நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளம் சென்று இன்றுவரை மீள முடியாத நிலையில் இருப்பதற்கு யார் காரணம் என்பதையும் நாட்டு மக்கள் நன்கறிவர்.

போர் இந்த நாட்டின் இஸ்திரத் தன்மையைச் சீரழித்ததற்கு ஆட்சியாளர்களின் அதீத இன-மத அடக்கு முறைகளே காரணமாக இருப்பதையும் சிங்கள மக்கள் நன்கு புரிந்து கொண்டுவிட்டனர்.

இதற்கு அரகலிய போராட்டம் மிக முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது.

அரகலிய போராட்டத்தினூடாக நாட்டு மக்களே நாட்டை மீட்டெடுக்கும் சிந்தனை மேலோங்கியதை கடந்த கால வரலாறுகள் நன்கு கற்பித்து நிற்கின்றன.

இந்த மாற்றங்கள் நிறைந்த தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை வடக்கு மக்கள் ஆர்வத்துடன் எதிர் கொள்ள வில்லை என்பது நேற்றைய வாக்களிப்பு நிலையங்களினூடே அவதானிக்க முடிந்தது.

வடக்கின் அநேக வாக்குச் சாவடிகள் வெறிச்சோடிக் கிடந்ததைக் காணக் கூடியதாக உள்ளது.

தவிர இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 38 பேர் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்பது இலங்கை வரலாற்றில் மிக அதிகமானது எனப் பதிவாகியிருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி என்ற விழிப்புணர்வூட்டல் செயற்றிட்டம் நடந்ததாகத் தெரியவில்லை.

வாக்களிப்பது எப்படி என்ற தெளிவுபடுத்தல் இல்லாமல் மக்கள் வாக்களிப்பதனால் வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகும் சந்தர்ப்பம் அதிகம்.

இதை அளிக்கப்பட்ட வாக்குகளுடன் நிராகரிக்கப்பட்ட வாக்குகளை ஒப்பிட்டுப்பார்ப்பதனூடாக அறிந்து கொள்ளலாம். புள்ளடியிடுதல், விருப்பு வாக்கிடுதல் என்பதற்குள் இருக்கும் தெளிவின்மை மக்களை மிகவும் குழப்பியுள்ளது.

வரலாற்றில் இல்லாதளவு வாக்குச் சீட்டு அதிக நீளமானதாக இருந்தமை மக்களை தமது தெரிவாளருக்கு வாக்களிக்கும் நிலையைக் குழப்புவதாயே அமைந்திருந்தது.

இன்று மாலை நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக யார் அரியணை ஏறப் போகின்றார் என்பது தெரிந்து விடும்.

இந்தத் தெரிவு மிக முக்கியம் வாய்ந்த தெரிவாகவே கணிக்கப்படும். இலங்கையின் தேர்தல் நிலவரத்தையும் தேர்தலின் பின்னரான நிலவரத்தையும் சர்வதேசம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

புதிய ஜனாதிபதியுடன் நல்லுறவைப் பேணி தமது இராஜதந்திரத்தை பலப்படுத்த பல நாட்டு இராஜ தந்திரிகள் தயாராகிவிட்டனர்.

நிலை இவ்வாறு இருக்கையில் தேர்தலுக்குப் பின்னரான தமிழினத்தின் நிலை எவ்வாறு இருக்கப் போகிறது என்பது மிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளதாயினும், தமிழ் தரப்பு புதிதாக பதவியேற்கும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவோ, பேரம் பேசவோ இயலாத நிலைகளே தற்போது காணப்படுகின்றது.

ஆம், தமிழர் தரப்பில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்குகள் வீழ்கிறதோ இல்லையோ, இவ் விடயம் தெற்கு அரசியல் தளத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏலவே தமிழர் பகுதிகளில் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு பெருகுவதாக கருத்துக்கள் பலமாக அடிபட்டிருந்த நிலையில், தமிழர் பேரம் பேசும் சக்தியை இழக்க குறித்த செயற்பாடு காரணமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களிடம் எழவே செய்கிறது.

எவ்வாறாயினும் துண்டம், துண்டமாக பிரிந்து நிற்கும் தமிழ் தரப்பு ஒன்று சேர வேண்டிய தேவை ஒன்று இப்போது இருக்கவே செய்கிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அங்கஜன் இராமநாதன், விஜயகலா மகேஸ்வரன் போன்றோர் ஆரம்ப காலங்களில் இருந்து அரசாங்கங்களுடன் இணைந்திருந்தமையினால் அவர்களை இந்தக் கூட்டுக்குள் உள்வாங்க தேவையில்லை.

இப்போதைய தேவை எது எனின் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த தமிழரசுக் கட்சி மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைய வேண்டும்.

இந்த ஒன்றிணைவு நிச்சயம் தமிழ் மக்களை உற்சாகப்படுத்துவதாய் அமையும்.


ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் நிறைவு பெற்றுவிட்டது. யார் ஜனாதிபதியானாலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்றதேர்தலை நடத்தும் சந்தர்ப்பம் அதிகம்.

இவ் வேளையில் தமிழ் தரப்பு பிரிந்து நின்றால் அது பாராளுமன்றத் தேர்தலை பாதிக்கும். இந்தப் பாதிப்பு அடுத்த ஐந்து வருடங்களுக்கு தமிழ்த் தரப்புகளை ஒன்றிணைக்கத் தவறிய நீண்ட இடைவெளியை ஏற்படுத்திவிடும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை ஒரு பாடமாகக் கொண்டு தமிழர் தரப்புகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவை.

-அபிமன்யு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 'கால்வைத்தவர்கள் உயிருடன் திரும்பியதில்லை'

# சென்டினல் தீவு-ஒரு திக்திக் பயணம்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

1981 ஆம் ஆண்டில், ப்ரிம்ரோஸ் என்று அழைக்கப்படும் ஒரு சரக்குக் கப்பலின் 28 பேர் கொண்ட அவரது குழுவினர் தீவின் அருகே விபத்தினால் மாட்டிக் கொண்டனர். ஆனால் இந்த முறை மாலுமிகள் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர். பின்னர் தீவுக்கு வந்த பார்வையாளர்கள் செண்டினலீஸ்கள் தங்கள் கருவிகள் மற்றும் ஆயுதங்களுக்காகக் கப்பலிலிருந்து உலோகத்தைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது என்று கூறுகிறார்கள். அதே ஆண்டில் பண்டிட்டும் அவரது குழுவினரும் தங்கள் முயற்சிகளை முடுக்கி விட்டார்கள். மாதம் ஒரு முறை தீவில் இறங்கினர்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு பண்டிட் ஓய்வு பெறுவதற்கு ஒரு வருடம் முன்பு, அந்த ஒழுங்குமுறையும் விடாமுயற்சியும் பலனளித்தன. 1991 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாள் தீவு வாசிகள் குழு ஒன்று ஆயுதங்கள் ஏதுவுமின்றி வெறும் நெய்யப்பட்ட கூடைகள் மற்றும் தேங்காய்களை வெட்டுவதற்குப் பயன்படுத்திய கருவிகளைப் பெறுவதற்காகக் கடற்கரைக்கு வந்தனர்.

அப்போது முன்னெப்போதையும் விட வெளியாட்களுடன் நெருங்கிப் பழகினார்கள். அந்த நாளின் பிற்பகுதியில், மானுடவியலாளர்கள் திரும்பி வந்தபோது கடற்கரையில் இரண்டு டஜன் செண்டினலிஸ் மக்கள் நிற்பதைக் கண்டனர்.

அப்போது ஒரு சுவாரஸ்யமான காட்சி அரங்கேறியது. வந்தவர்களைக் குறிவைக்க ஒரு ஆண் தன் வில்லை உயர்த்தினான். ஒரு பெண் வில்லை கீழே தள்ளினாள். அதற்கு அந்த மனிதன் வில்லையும் அம்பையும் கைவிட்டு மணலில் புதைத்தான். இது பேச்சுவார்த்தை அம்சமா அல்லது சடங்கு நிகழ்ச்சியா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஆயுதங்கள் அகற்றப்பட்டவுடன் மக்கள் தங்கள் தேங்காய்களைச் சேகரிக்கப் பார்வையாளர்களின் படகுகளுக்கு விரைந்தனர்.

ஆனால் செண்டினீஸ் விருந்தோம்பல் அதன் வரம்புகளைக் கொண்டிருந்தது. மற்றொரு விஜயத்தில், சில வாரங்களுக்குப் பிறகு, ஒரு செண்டினலிஸ் நபர், விருந்தினர்கள் வெளியேற வேண்டிய நேரம் இது என்று பண்பாட்டுக்குத் தனது கத்தியை உருவி, வெட்டும் சைகை செய்தார். "நாம் அவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்காமல் அவர்களின் எல்லைக்குள் நுழைய முயன்றாலோ அல்லது வசதிக்காக மிக அருகில் சென்றாலோ, அவர்கள் நம்மைப் புறக்கணிப்பார்கள். அவர்கள் கடைசி முயற்சியாக அம்புகளை எய்வார்கள்" என்று பண்டிட், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிடம் கூறினார்.

தீவு வாசிகளுக்கும் மானுடவியலாளர்களுக்கும் இடையிலான மெல்லிய நட்பு தேங்காய் கையூட்டுகளுக்கு அப்பால் நகரவில்லை. செண்டினலீஸ்கள் பதிலுக்குப் பரிசுகளை வழங்கவில்லை மற்றும் பார்வையாளர்களைத் தங்குவதற்கு அல்லது உள்நாட்டிற்கு அழைத்துச் செல்ல அழைக்கவில்லை. மேலும் இரு தரப்பிலும் உண்மையில் எப்படி மற்றவருடன் பேசுவது என்று கற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் இந்திய அரசாங்கம் 1996 இல் மானுடவியலாளர்களின் வருகையை நிறுத்தியது.

2004 சுனாமிக்குப் பிறகு இந்தியக் கடலோரக் காவற்படையின் ஹெலிகொப்டர்கள் தீவின் மீது பறந்தபோது, செண்டினலீஸ்கள் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டார்கள். வில் மற்றும் அம்புகளால் ஹெலிகொப்டரைத் தாக்க சிறிதும் தயங்கவில்லை. ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு, 2006 இல், ஒரு இந்தியப் படகு கரையோரம் சென்றது. மேலும் செண்டினலீஸ் மக்கள் படகில் வந்த மீனவர்கள் இருவரையும் கொன்று அவர்களின் எச்சங்களைப் புதைத்தனர்.

2018 ஆம் ஆண்டுசெண்டினலீஸ் மக்கள் அமெரிக்கச் சுற்றுலாப் பயணி ஜான் ஆலன் சாவ் தங்கள் தீவில் காலடி எடுத்து வைத்து கடற்கரையில் நின்று பாடல்களைப் பாடியதை விரும்பவில்லை. அவர்கள் அவரை இரண்டு முறை விரட்டியடித்தனர். ஆனால் அவர் மூன்றாவது முறையாகக் கரைக்கு வந்தபோது, அவர்கள் அவரைக் கொன்றதாக நம்பப்படுகிறது. 2006இல் இரண்டு இந்திய மீனவர்களுக்கு செய்ததைப் போலவே, அவரது உடலையும் புதைத்துவிட்டதாகத் தெரிகிறது. இந்திய அரசாங்கம் இப்போது சௌவின் உடலைத் தேடுவதை நிறுத்தியுள்ளது.

இந்த சம்பவம் செண்டினலீஸ் போன்ற ஒப்பீட்டளவில் தொடர்பில்லாத குழுக்களுக்கான பாதுகாப்பு பற்றிய விவாதத்தைத் தூண்டியுள்ளது. மானுடவியலாளர் பண்டிட் அவர்களை விட்டுவிட வேண்டும் என்று வாதிட்டார். இப்போது ஓய்வு பெற்ற அந்த மானுடவியலாளரின் கூற்றுப்படி செண்டினலிஸ் வெளியுலகோடு தொடர்பு கொள்ள விரும்பவில்லை என்றும் அவர்கள் தாங்களாகவே நன்றாக இருக்கிறார்கள் என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்திய அதிகாரிகள் அவ்வப்போது மக்கள்தொகை கணக்கெடுப்புக்காகத் தீவுக்குத் தொடர்ந்து வருகிறார்கள். கடைசியாக 2011 இல் வந்தார்கள்.

**இப்படியாக செண்டினலீஸ் பழங்குடி மக்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனிதர்கள் வாழும் ஒரு குழுவினராக இருக்கின்றனர். உலகில் இப்படித் தனித்து வாழும் மக்கள் கூட்டம் மிகவும் குறைவு. மானுடவியலாளர்கள் நோக்கில் வடக்கு செண்டினல் தீவு மக்கள் முக்கியமானவர்கள். இவர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளும் போது நாம் மனித குல வரலாறு எப்படி நடந்திருக்கும் என்பதை யூகிக்க முடியும். அதே நேரம் நாம் அவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருப்பதும் அவசியம். (தொடரும்)**

# அடங்குமா

## நெதன்யாகுவின் ஆணவம்?

ஒக்டோபர் 7, 2023 இஸ்ரேல், ஹமாஸ் இடையே போர் தொடங்கிய தினம். அதற்கு ஒரு நாள் முன்பாக, சுமார் 250 இஸ்ரேலியர்களைப் பிணைக்கைதிகளாகப் பாலஸ்தீனத்தின் காசா பகுதிக்குப் பிடித்துச் சென்றது ஹமாஸ் படை. அந்தப் பிணைக்கைதிகளில் ஆறு பேர் அண்மையில் கொல்லப்பட்டதால் சொந்த மக்களே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். இஸ்ரேல் மக்களின் போராட்டத்தால் நெருக்கடியில் சிக்கியிருக்கும் நெதன்யாகு போரை நிறுத்துவாரா?

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட பிறகும், காசா போர் அதி தீவிரமடைந்த நிலையில் பிடித்துச் சென்ற பிணைக்கைதிகளில் ஆறு பேரைக் கொன்றிருக்கிறது ஹமாஸ் படை. குண்டடிபட்டுக் கிடந்த இரண்டு பெண்கள் உட்பட ஆறு பேரின் சடலங்களை, காசாவின் ரஃபா பகுதியிலிருந்து மீட்டுவந்தது இஸ்ரேல் இராணுவம்.

உடல்கள் மீட்கப்பட்டு வந்த பிறகு, ஹமாஸ் படை அந்த ஆறு பேரும் பேசிய வீடியோக்களை வெளியிட்டிருக்கிறது. அந்த வீடியோக்களில் ஆறு பேரும் தங்களது குடும்பத்தின் மீது வைத்திருக்கும் அன்பை உருக்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். கொல்லப்பட்ட 24 வயது பெண் ஈடன் எருஷால்மீ, போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்ட இஸ்ரேல் மக்கள் போராட வேண்டும்' என்று கோரிக்கை வைத்திருந்தார்.

இந்தக் காணொளிகளும் ஆறு பேர் கொல்லப்பட்ட செய்தியும்தான் லட்சக்கணக்கான இஸ்ரேல் மக்களை அரசுக்கு எதிராகப் போராடத் தூண்டியிருக்கிறது. 'சொந்த மக்களை உயிருடன் மீட்கத் தவறிய நெதன்யாகு பதவி விலக வேண்டும்' என்ற குரல்கள் இஸ்ரேலின் முக்கிய நகரங்களில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

முதலில் டெல் அவிவ், ஜெருசலேம் நகரங்களில் மட்டுமே தொடங்கிய இந்தப் போராட்டம், தற்போது நாட்டின் பல்வேறு நகரங்களுக்கும் பரவியிருக்கிறது. ஏழு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நெதன்யாகுவுக்கு எதிராகக் குரல் கொடுத்துவருகின்றனர்.


இஸ்ரேல் அரசியலை உற்றுநோக்கும் சிலர் 'லட்சக்கணக்கான மக்கள் நெதன்யாகுவுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பதால் அவரது அரசியல் எதிர்காலமே கேள்விக்குறியாகியிருக்கிறது. இருந்தும் அவர் போர் நிறுத்த நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டவில்லை. காரணம் தீவிர வலதுசாரிக் கட்சிகளுடன் இணைந்துதான் கூட்டணி ஆட்சியமைத்திருக்கிறார் நெதன்யாகு. கூட்டணிக் கட்சியினரோ, ஹமாஸை முற்றிலும் ஒழித்துக்கட்டாமல் போரை நிறுத்தினால், ஆதரவைத் திரும்பப் பெறுவோம்' என்று எச்சரித்திருக்கின்றனர்.

'அரசியல் எதிர்காலத்தைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். இப்போது பிரதமர் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்' என்று சுயநலத்துடன் செயற்படுவதால்தான் போரை நிறுத்த மறுக்கிறார் நெதன்யாகு' என்கிறார்கள். இத்தனை போராட்டங்களுக்குப் பிறகும், பிணைக்கைதிகளை உயிருடன் மீட்க முடியாமல் போனதற்கு நாட்டு மக்களிடம் மன்னிப்பு மட்டும் கேட்டிருக்கிறார் நெதன்யாகு.

2014ஆம் ஆண்டு, காசா பகுதியில் 51 நாட்கள் கடும் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல். இதில் 551 குழந்தைகள் உட்பட 2,251 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். அப்போது, காசா எல்லையையொட்டிய ஸ்டெரோட் நகரத்திலுள்ள மலை உச்சிக்கு, சோஃபாக்கள், நாற்காலிகளை இழுத்துக்கொண்டு சென்ற இஸ்ரேலியர்கள், காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களை ரசித்துக் கைதட்டிப் பார்த்தார்கள். அதிலும் சிலர் பாப்கார்ன் சாப்பிட்டுக்கொண்டே சினிமாவைப்போல அந்தக் கொடூரத்தை ரசித்தனர்.

ஆனால் இன்று, இஸ்ரேல் மக்கள் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்பதால் அவர்களின் மனநிலை வேறாக இருக்கிறது. சில இஸ்ரேல் மக்கள் மட்டுமே, பாலஸ்தீன மக்கள்மீது இரக்கம் கொண்டு அமைதி வேண்டுமெனக் கோருகின்றனர். போராடுபவர்களில் பெரும்பாலானவர்கள் பிணைக்கைதிகளை மீட்பதற்காக மட்டுமே போர் நிறுத்தம் வேண்டும் எனக் கேட்கிறார்கள் என்கின்றனர்.

எது எப்படியோ... மக்கள் போராட்டத்தால் நெதன்யாகுவுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியால் போர் நிறுத்தம் ஏற்பட்டால் நல்லது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்க மாட்டர்களா வியாசரே?



காலையில் அரியநேத்திரன், மாலையில் சஜித் பிரேமதாஸ, அதற்கு முன்னர் ரணில் மாவையின் அரசியல் அனுபவம் பற்றி?

**ரிதுஷ் — வதுரி**

**மற்றவரை மதிக்கும் தன்மை மனிதர்களிடம் அற்றுப்போய் விட்டதே வியாசரே?**

அண்மையில் மிக முக்கியமான விடயமாக யாழ்.போதனா மருத்துவமனை பொது தொடர்பு இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டேன்.

தொலைபேசி எடுத்தவர் மிகவும் பொறுமையாக நான் கூறிய விடயத்தைக் கேட்டு விட்டு இது தொடர்பில் குறிப்பிட்ட இடத்திற்கு தகவலை மாற்றுகிறேன் என அன்பாகக் கூறி தொடர்பை மாற்றினார்.

தொடர்பு கிடைத்ததும் வணக்கம், நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கதைக்கிறேன் என்றேன். எதிரில் இருந்த பெண் நாங்களும் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறோம், என்றார். நான் கூற வந்த விடயத்தைக் கூறுவதற்குள் நீங்கள் ஏதோ யோசிக்கிறீர்கள் போல, வடிவா யோசித்து விட்டு தொடர்பு எடுங்கள் என இங்கிதம் இன்றிப்பேசினார்.

இவ்வாறானவர்கள் இருந்தால் அந்த நிறுவனம் நன்றாக வர வாய்ப்பே இல்லை.

எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நல்ல சிந்தனையுடன் அன்பாய், பண்பாய் பேசப் பழகிக் கொள்வோம்.

**திருத்துவன் — மந்துவில்**

**சினிமாவை நிஜ வாழ்க்கை என்று நினைக்கும் இளம் சமூகம் மீட்சி பெறுமா வியாசரே?**

தன்னை ஒரு கதாநாயகன் என்று நினைப்பது ஒரு நாளும் தவறாகாது. அந்தக் கதாநாயகன் யார் என்பதில் தான் சிக்கலே இருக்கிறது.

ஏழை மக்களின் துன்பங்கண்டு அவர்களின் சுதந்திரத்துக்காக போரிட்டு இளைஞர் மத்தியில் எழுச்சித் தீயை ஏற்படுத்திய ஒருவனை உன் கதாநாயகனாக எண்ணிச் செயற்படு. இதில் தவறேதும் இல்லை.

ஆனால் நீ எண்ணும் கதாநாயகன் களவு, கொலை, கொள்ளை, போதை என்று எதையும் தவறவிடாதவனாக இருக்கிறான் என்றால் உன் பேச்சில், உன் நடத்தையில், உன் செயற்பாட்டில் ஒரு நாளும் அறம் இருக்காது. இதுவே உண்மை.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**கணேஸ் — பருத்தித்துறை**

**காலையில் அரியநேத்திரன், மாலையில் சஜித் பிரேமதாஸ, அதற்கு முன்னர் ரணில். மாவையின் அரசியல் அனுபவம் பற்றி?**

அரசியல் சாணக்கியம் என்பது வேறு. வெறுப் பேற்றல் என்பது வேறு.

மாவை ஐயாவின் இச்சந்திப்புகள் கடவுள் சத்தியமாக அரசியல் சாணக்கியம் என்ற நியமத்திற்குள் வராது.

தமிழரசுக் கட்சி தறிகெட்டு அவருக்கு இவர் ஆதரவு, இவருக்கு அவர் ஆதரவு, அவர் அவை இருவருக்கும் ஆதரவு என்று கதிகலங்கி நிற்கிறது.

அவர்களை ஒழுங்குபடுத்தி நான் தலைவர். நான் சொல்வது தான் சட்டம் என்று உறுக்கி இருத்தியிருக்க வேண்டியவர் மாவை.

ஆனால் அவர் அதைச் செய்யாமல் வடக்குக்கு விஜயம் செய்யும் அனைவரையும் சந்தித்துக் கொண்டிருந்தால் தமிழர் நிலை என்னவாகும் என்று புரியவே இல்லை.

**மதுவன் — மீசாலை**

**யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்க மாட்டர்களா வியாசரே?**

தேசிய கிரிக்கெட் மைதானம் ஒன்று மண்டைதீவில் அமையப் போவதாக தகவல்கள் எழுந்தன. அதற்கான அத்தனை வேலைகளும் ஆரம்பமாகியிருந்தன. ஆனால் இப்போது அதன் நிலை என்னவென்று தெரியவில்லை.

அதைத் தொடர்ந்து மல்லாகத்தில் தேசிய கிரிக்கெட் மைதானம் ஒன்று வருவதாகக் கூறி கள விஜயங்களும் நடந்தாகின. ஆனால் அது கிடப்பில் கிடக்க தற்போது செம்மணியில் தேசிய மைதானம் ஒன்று அமைக்கப்படும் என்ற அறிவிப்பு.

அறிவிப்புகள் பலமாக இருந்தாலும் செயற்பாடுகள் மந்தமாகவே இருக்கிறது.

செயற்பாடுகளையும் துரிதப்படுத்தினால் மிக்க நன்று.

**பிரபா — அத்தியடி**

**சஜித்திற்கு இந்தியா- அநுரவுக்கு சீனா அப்படியென்றால் இலங்கை யாருக்கு?**

நாடு எக்கேடு கெட்டுப்போனால் என்ன நமக்கு நமது பதவி, பவர் முக்கியம் என்ற எண்ணம் கொண்ட அரசியல் தலைவர்கள் ஒரு நாளும் வரலாற்றில் இடம் பிடிப்பதில்லை.

உள்ளங்கை கொடுப்பது புறங்கைக்கு தெரியக் கூடாது என்றொரு பழமொழியுண்டு.

ஆனால் இங்கோ நான் நாட்டை மீட்டேன். நான் வரிசையுகத்தை ஒழித்தேன் என்று செய்ததைச் சொல்லிக் காட்டி பதவி பெறத் துடிக்கின்றனர் சிலர்.

இந்த நாடு எம் அனைவருக்கும் சொந்தமானது. இங்கு இன, மத பாகுபாடின்றிய நிலை வர வேண்டும். அப்போதே நாடு முன்னோக்கி நகரும்.

**சுதன் — குப்பிளான்**

**தமிழரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதன் ஊடாக எதைச் சாதித்து விட்டது?**

மரணவீடு என்றால் அங்கு பிணமாக நான்தான் இருக்க வேண்டும் என்ற அதிகார சிந்தனை தமிழினத்தை சிதைத்து விட்டது என்றே கூற வேண்டும்.

ஒருவேளை தமிழ்ப் பொது வேட்பாளர் எனும் பொறி, தமிழரசுக் கட்சிக்குள் இருந்து எழுந்திருந்தால் இன்று தமிழ் பொது வேட்பாளரை தலையில் தூக்கி வைத்திருப்பார்கள்.

என்ன செய்வது பொது வேட்பாளர் வேறொரு திசையில் இருந்து தெரிவாகியதால் அவரை எதிர்த்தார்கள்.

தவிர இவர்களின் அரசியல் சற்று வித்தியாசமானது.

அதாவது தமிழினம் எக்கேடு கெட்டாலென்ன நாம் நினைத்ததை நமது டீலை சரியாக அரங்கேற்றினால் போதும் என்பதாகும்.

**இளங்கோ — மானிப்பாய்**

**இன வெறிக் கொடுமையினால் தம் இருப்பை இழக்கும் இனமொன்று தமக்குள் ஒன்றாகி குரலிடுவதை இனவாதமாக்கும் குள்ள நரிகள் பற்றி?**

வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற ஒப்பற்ற வீரனுடன் இருந்த எட்டப்பனே ஆயுத பூஜை நாளில் வீரபாண்டியனிடம் ஆயுதம் இருக்காது அன்று அவனைக் கைது செய்யலாம் என்று வெள்ளையருக்கு தகவல் வழங்கினான்.

இப்படி தமது இனத்தையே காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்கள் எம்மிடையேயும் இருக்கவே செய்கின்றார்கள்.

என்ன ஆச்சரியம் என்றால் அந்த எட்டப்பர்களுக்கு பின்னேயும் ஒரு கூட்டம் உயிரையும் கொடுக்க தயாராக நிற்பதுதான்.

தன் இனத்தின் விடிவுக்காக உயிரையே துச்சமென்று மதித்து களமாடியவர்கள் வாழ்ந்த தேசத்தில் எட்டப்பர்களுக்கு குடை பிடிப்பவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கும் போது, நெஞ்சம் வேதனையால் அடைத்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**பண்டிதர்** பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** என்ன எப்பவும் நேரத்தோட ஆலடிக்கு வாற வாத்தியாரை இன்னமும் காணவில்லை. என்ன சங்கதியோ தெரியல்ல.

**கங்காணி:-** வாத்தியார் வாக்களிக்கிறதுக்காக ஊருக்குப் போயிருப்பார் போல.

**மூப்பர்:-** அது சரி, எங்கட தமிழர் பகுதியில வாக்களிப்பு மந்தமாக இருந்ததாகக் கேள்வி.

**சாத்திரியார்:-** உண்மை தான். தேர்தலில வாக்களித்து எங்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

அதோட எங்கட அரசியல்வாதிகளின்ர திருகுதாளங்களும் சொல்லிமாளா.

ஆகையால வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் ஒன்று தான் எண்டு எங்கட சனங்கள் நினைத்து வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகாமல் விட்டுட்டினம் போல.

**சிறாப்பர்:-** எப்படியும் இண்டைக்கு றிசல்ட் வந்திடும்.

ஆருக்கு வெற்றி எண்டு தான் தெரியாம இருக்குது.

**சாத்திரியார்:-** ஓ! ராஜபக்ஷ தரப்பு வெளிநாடுகளுக்கு ஓடுறதைப் பார்த்தால், தேர்தல் முடிவுகள் ஏதோ பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகுது போலத் தான் தெரிகிறது.

**பண்டிதர்:-** வேட்பாளராக இருக்கிறபோது அப்படிச் செய்வன், இப்படிச் செய்வன் எண்டெல்லாம் கதைக்கிறவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றதும் மமதை கொள்ளுவர், தேர்தல் பிரசாரத்தின் போது தான் கூறியதை மறந்து தன் பாட்டில செயற்படத் தொடங்குவர்.

இது தான் எங்களுக்கான அனுபவம்.

ஆகையால ஆர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றாலும் எங்கட பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்கும் எண்டு நான் நம்பல்ல.

**மூப்பர்:-** தமிழ்ப் பொதுவேட்பாளரின்ர நிலைமை எப்படி இருக்குது.

**விதானையார்:-** தமிழ்ப் பொது வேட்பாளர் எவ்வளவு வாக்குகளைப் பெற்றுள்ளார் என்ற விபரம் வெளிவரும் தானே!

**கங்காணி:-** தமிழ்ப் பொது வேட்பாளர் குறைந்த வாக்குகளைப் பெற்றால், அது தமிழ் மக்களிட்ட ஒற்றுமையில்லை என்பதாகப் பார்க்கப்படுமோ.

**விதானையார்:-** தமிழ் மக்களிட்ட ஒற்றுமை இல்லை என்பது ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்த் தரப்புகள் கன்னை பிரிந்து நிற்பதிலேயே தெரிந்திருக்கும் தானே!

**சிறாப்பர்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** தமிழரசுக் கட்சியில சிலர் சஜித்துக்கு ஆதரவு. இன்னும் சிலர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவு. ஒரு சிலர் தனித்து ரணிலுக்கு என ஆதரவு தெரிவித்திருந்தவையள்.

அதேநேரம் முன்னணி தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கூறியது.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் கூட, தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு ஒரே முடிவை எடுக்க முடியவில்லை எனும் போது தமிழ்த் தரப்புகளிட்ட ஒற்றுமையில்லை என்பது தெரிகிறது தானே.

**பண்டிதர்:-** என்ன இருந்தாலும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கடும் தலையீடு செய்வதை சற்றுத் தணிக்கிறது நல்லது.

ஏனெண்டால் இஞ்ச இருக்கிற தமிழ் மக்களுக்கு இங்க இருக்கிற சமகால யதார்த்தம் நன்கு தெரியும்.

அதேநேரம் புலம்பெயர் நாடுகளில இருக்கிற தமிழ் அமைப்புகளிட்டயும் ஒற்றுமைப்பாடு இல்லை.


அவர்களும் தனித்தனி அமைப்புகளாக இயங்குகினம்.

அதிலும் விடுதலைப் புலிகளின்ர பணத்தில இவையள் திருவிழா நடத்துகிறதாகவும் கேள்வி.

தங்கட அமைப்புகளின்ர இயங்கு நிலையை அங்க இருக்கிறவர்களிட்டக் காட்டுவதற்காக, இஞ்ச அவர்களின்ர தலையீடு அதீதமாக இருக்கிறதாக அறிஞ்சன்.

உண்மையில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எங்களுக்குத் தேவையானவை தான். ஆனால் அந்த அமைப்புகளிலும் சில அமைப்புகள் சிங்கள ஆட்சியாளர்களின்ர நிகழ்ச்சி நிரலில இயங்குகிறதாகக் கேள்வி.

அத்தகைய அமைப்புகளின்ர ஊடுருவல் தான் இங்க அதிகம் எண்டும் எங்கட சனங்கள் கதைக்கினம்.



## ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு எங்கட பகுதியில மந்தமாப்போச்சுது

ஆகையால, வெளிநாடுகளில இயங்குகிற புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தாயகத்தில இருக்கிற மக்களின்ர மன நிலையை உணர்ந்து கொண்டு செயலாற்றுவது தான் நல்லது.

தேவையில்லாமல் காசுகளைக் கொட்டி, இஞ்சயும் சில குழுக்களை உருவாக்கிவிட, எல்லாம் கந்தறுந்து காவடி எடுக்கிற கதையாக நிலைமை முடிஞ்சு போகுது.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் நீண்ட நேரம் கதைக்க ஆலடி நிசப்தமாகியது.

அந்நேரம் வாத்தியார் வைத்திலிங்கமும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

என்ன வாத்தியார் இண்டைக்குப் பிந்திப் போய்ச்சுது. என்ன சங்கதி ஊருக்குப் போனதோ... விதானையார் விசுவலிங்கம் விசாரித்தார்.

**வாத்தியார்:-** இல்லை விதானையார். நான் தெல்லிப்பழை துர்க்கை அம்மனின்ர தீர்த்தத் திருவிழாவுக்குப் போனனான்.

ஆலயத்தின்ர உள் வீதியில நிண்ட போது ஒரு தெய்வீக உலகத்தில நிற்பதாக உணர்ந்தன்.

அந்தளவுக்கு ஆலய அமைப்பும் சித்திர வேலைப்பாடுகளும் இருந்தன.

அதிலும் தங்க முலாம் பூசப்பட்ட கொடித்தம்பம் தகதகவென பட்டொளி வீசுகின்ற அந்தக் காட்சி இப்பவும் என்ர மனக் கண்ணில நிழலாடுது.

உலகில எங்கும் இல்லாத ஒரு பெரும் சரித்திரமாக அபிராமி அந்தாதிப் பாடல்கள் அனைத்தையும் கருங்கல்லில செதுக்கி ஆலய உட்சுவரில பதிப்பு செய்திருப்பது உண்மையிலேயே அற்புதம் தான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தீர்த்தமாடி வந்த போது, அம்மனின் திருமுகம் அந்தப் பகுதி முழுமையிலும் தெய்வீகம் பொலிந்திருப்பதற்கு சாட்சியாக இருந்தது.

நீங்களும் ஒருக்கா தெல்லிப்பழை துர்க்கை அம்மனிட்டப் போய் வாருங்க.

ஆரோக்கியமாக இருக்கிற போது ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்யிறது தான் புத்திசாலித்தனம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




பள்ளிவிலிகள் என்போர் கோட்டைக்குள்ளிருந்த கோயிலையும், வீடுகளையும் சுத்தி செய்து வெள்ளையடிக்கவும் கடமைப்பட்டிருந்தனர். பள்ளர் என்போர் மாதமொரு தடவை ஒல்லாந்தக் கம்பனி பள்ளர் யானைகளுக்கு தென்னையோலை கொண்டுவந்து கோட்டைக்குள் சேர்த்தனர்.

அத்தோடு வலிகாமம் பிரிவிலுள்ள பள்ளர் என்போர், மாதத்தில் 3 முதல் 6 நாள் வரை கோட்டைக்குள் வந்து திரிகைகளில் வெடிமருந்துகளை அரைத்துக் கொடுக்க வேண்டியவர்களாகவும் இருந்துள்ளனர்.

குதிரைகளுக்குப் புல் வழங்கும் கடமையும் இவர்களுடையதாக இருந்தது. சாண்டார் என்போர் கம்மாந்தர் கோட்டையிலிருந்து வெளியே புறப்படும் போது சாமான்களைச் சுமப்பவர்களாகவும், தீப்பந்தம் பிடிப்பவராகவும் விளங்கினர். வெற்றிலைக்காரர் என்போர் கோட்டைக் கம்மாந்தருடைய அடுக்களைக்கு முயல் வேட்டையாடிக் கொண்டு வந்து கொடுக்கும் ஊழியம் செய்தனர். கோட்டையில் வெள்ளாளரும் மடப்பள்ளியாரும் கம்மாந்தருடைய கணக்குப் பிள்ளைகளாக இருந்துள்ளனர்.

அரச ஊழியம் செய்யாது தவிர்க்கப்பட்டவர்கள் மாதம் தோறும் ஐந்து கூடை ஊமற்கரி சுட்டு ஒல்லாந்தக் கம்பனியின் கம்மாலைகளுக்கு வழங்க வேண்டியவர்களாகவிருந்தனர்.


ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சர்வசாதாரணமாகச் சென்று வரக்கூடிய உரிமை வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை (வண்ணை வைத்தீசுவரன் கோயில்) நிர்மாணித்த வைத்திலிங்கச் செட்டியாருக்கு இருந்தது. 1751 ஆம் ஆண்டு வைத்திலிங்கச் செட்டியாருக்கு வயது நான்கு. அழகும் கண்டோரைக் கவரும் கவர்ச்சியும் அவரிடமிருந்தன. தனது தந்தையார் கோபாலச செட்டியாரின் கடையில் இருந்தவேளை.

அங்கு கடைத்தெருவுக்கு வந்த கோட்டைக் கம்மாந்தரின் மனைவி அவரைக்கண்டு விருப்புற்று தன் வளர்ப்புப் பிள்ளையாகத் தத்தெடுத்துக் கொள்ள நேர்ந்தது. பதினெட்டு வயது வரை வைத்திலிங்கச் செட்டியார் கோட்டையில் கம்மாந்தரின் மாளிகையிலும் தனது பெற்ற தந்தைதாயர் வீட்டிலும் மாறி மாறி வாழ்ந்து வந்துள்ளார். தமிழிலும் ஒல்லாந்த மொழியிலும் அவருக்கு நல்ல தேர்ச்சி இருந்தது.

வெளிநாட்டுப்பயணிகள் பலர் யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பயணிகளாக வந்துள்ளனர். 1710 ஆம் ஆண்டளவில் ஸ்ரெயிகர் என்பவரும், 1744 ஆம் ஆண்டளவில் ஹெயிட் என்வரும், 1726 ஆம் ஆண்டளவில் வலன்ரைன் என்பவரும் கோட்டையைப் பார்வையிட்டு விபரமாக எழுதியுள்ளதுடன் அக்காலக் கோட்டை பற்றிய ஓவியப்படங்களையும் வரைந்து தந்துள்ளனர்.

(தொடரும்...)

# கடல் புறா




காலத்தின் பதிவு 125

"நேற்றிரவு... நேற்றிரவு..." என்று இரண்டு மூன்று முறை காரணமில்லாமல் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள், அக்ஷயமுனைக் கோட்டையின் செல்வி. அந்த இரவில் அவன் சொன்ன ஒவ்வொன்றும் அவளுக்கு நினைவிலிருந்தது. அந்தத் துன்ப நினைவில் சற்று இன்பமும் கலந்தது.

அத்தனை உளறலிலும் இளையபல்லவன் தன்னை அடிக்கடி "மனைவி மனைவி" என்று அழைத்ததை நினைத்துப் பார்த்தாள்! பலத்த அவன் உடல் தன் உடல் மீது குடி வெறியுடன் சாய்ந்ததையும் எண்ணிப் பார்த்தாள். அந்த எண்ணங்களிலும் எத்தனை இன்பமிருந்து அவளுக்கு.

அவன் அறிவிழந்திருந்த நிலையில் கிடைத்த இன்பம் அது? அறிவுடனிருந்து அதெல் லாம் நடந்திருந்தால்? இப்படி எண்ணிய அவள் இதயம் வேதனையும் இன்பமும் கலந்த உணர்ச்சிகளால் இழுபட்டாலும் தான் இளையபல்லவனை விட்டுச்செல்லும்போதே இரவு மிகவும் ஏறியிருக்க, கண்டியத்தேவனை அவன் எப்பொழு சந்தித்திருக்க முடியும்.

இந்த மகாராணிப் பட்டத்தைத் தனக்கு எப்பொழுது அளித்திருக்க முடியும் என்று யோசித்து. "தேவரே! நேற்றிரவு நீங்கள் அவரை எப்பொழுது சந்தித்தீர்கள்?" என்று வினவினாள். "நள்ளிரவு எட்டும் வேளை," என்று பதில் கூறினான் கண்டியத்தேவன்.

"அப்பொழுதுதான் மகாராணிப் பட்டம் எனக்களிக்கப்பட்டதா?" என்று கேட்டாள் அவள். "ஆம் மகாராணி?" என்றான் கண்டியத்தேவன். "தேவரே! மீண்டும் அப்படி அழைக்க வேண்டாம்" என்றாள் கண்டிப்பான குரலில்.

"இதை என்னிடம் சொல்லிப் பயன் இல்லை" என்றான் தேவன். "ஏன்?" "இளையப்பல்லவர் உத்தரவை மீற எங்கள் யாருக்கும் துணிவில்லை." "அவர் நேற்றிரவு இருந்த நிலையைப் பார்தீரல்லவா..." என்று துவங்கிய மஞ்சளழகி சட்டென்று தன் பேச்சை நிறுத்திக்கொண்டு சங்கடத்துடன் தேவனைப் பார்த்தாள். இரவில் தான் இளையபல்லவனின் அறையில் தனித்திருந்ததைக் கண்டியத்தேவன் புரிந்துகொண்டுவிட்டால் என்ன செய்வதென்றெ பீதி அவளைத் தடுமாறச் செய்தது.

கண்டியத்தேவன், "நீங்களும் நேற்றிரவு அவரைப் பார்த்தீர்களா?" என்றான் வியப்புக் குரலில் விரிய. மஞ்சளழகி தலையைக் குனிந்துகொண்டு, "ஆம் பார்த்தேன்," என்றாள். "அப்பொழுது அவர்..." என்று

## குடிப் பழக்கம்

இழுத்தான் கண்டியத் தேவன். "சுயநிலையில் இல்லை..." என்று முடித்தாள் மஞ்சளழகி. "ஆம், சுயநிலையில் அடியோடு இல்லை" என்று கண்டியத்தேவனும் ஒப்புக்கொண்டான். "அங்கு நீங்கள் எதற்காகப் போனீர்கள்?" என்று கேட்டாள் மஞ்சளழகி.

"உத்தரவு வந்தது," என்றான் கண்டியத்தேவன். "யார் உத்தரவு?" "படைத்தலைவர் உத்தரவு." "காவலன் வந்து அழைத்தானா?" "ஆம்" "ஐயோ, அவர் மதியிழந்த சமயத்தில் இட்ட உத்தரவல்லவா அது?" "எந்தச் சமயத்தில் அவர் உத்தரவிட்டாலும் பணியவேண்டியது எங்கள் பொறுப்பு." இதைக் கண்டியத்தேவன் திட்டமாகச் சொன்னான்.

மஞ்சளழகி சிறிது யோசித்துவிட்டுக்கேட்டாள். "அப்பொழுது தான் என்னை மகாராணியென்று அழைக்கக் கட்டளையிட்டாரா? என்று. "ஆ" வேறு என்ன கட்டளையிட்டாா?"

கண்டியத்தேவன் பதிலுக்கு மரக்கலத்தைச் சுட்டிக்காட்டினான். மஞ்சளழகி திக்பிரமையுடன் அவளைப் பார்த்தாள். "மரக்கலத்தின் மேற்பகுதியைப் பிரிக்கச் சொல்லிக் கட்டளையிட்டாரா?" என்று கேட்டாள் அந்தப் பிரமை குரலிலும் அலைமோத.

"அப்படித் திட்டமாக உத்தரவிடவில்லை" என்றான் தேவன். "வேறு எப்படி உத்தரவிட்டார்?" "இது சீனர் கப்பல்லவா?" "ஆம்" "அதைப் பாரதத்துக் கப்பலாக மாற்றக் கட்டளையிட்டார்." "இரண்டுக்கும் வித்தியாசமுண்டா?"

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சிபெற்று நில்

புதிய வாழ்வு வாழ எண்ணும்
அரிய வாழ்வு காணவா- இன்பம்
செழிக்கும் வாழ்வு காண எண்ணும்
வழிகள் காண வேண்டுமே- இங்கு
மனிதம் என்றும் மகிழ்ந்து வாழும்
மார்க்கம் இல்லையா? - உன்
எண்ணம் போல சிறந்து வாழ
வழிகள் காண எழுந்து வா

இழிவு கண்டு எதிர்த்து நிற்கும்
மார்க்கம் தேவையா? - வாழ்வில்
உறுதியோடு குன்றிடாத நிலையில்
வாழ வேண்டுமா?- சமனற்ற
நீதி பேணும் வாழ்வை விடுத்து
மனித நீதி காண நீ எழுந்து வா
மனிதனாக வாழும் வாழ்வை
மதித்துப் போற்றி வாழச்செய்

அகிம்சை வாழ்வை வென்றெடுத்து
வாழ்ந்த வாழ்விலே - வாழ்வு
அமைதி கண்டு வாழ எண்ணி
உறுதி பெற்ற நாட்டிலே
இனிது என்று கூற ஏங்கும் மனிதனே - சம
நீதி பேணும் வாழ்வை நிலைக்க வைத்து
வாழத்துணிவு கொள்- மனிதம்
மனிதமாக வாழ எழுச்சி பெற்று நில்

வளவை வளவன்.

# சிந்தனை செய்



சிந்தனை சிறகடித்தால்
பாரினில் நீ சிறகடிப்பாய்
சிந்தனை விதையை விதைத்துவிடு
உன் செயல்கள் அனைத்தும் விருட்சமாகும்

சிந்தனை செய்பவன் சிகரமாகிறான்
சிந்திக்க தவறுபவன் சிதைந்துவிடுகிறான்
சிந்தனை செய்பவனை தேடிச் சென்றிடும் கூட்டம்
சிந்தனை இல்லையெனில்
செப்புக்காசு பெறான்-மனிதன்

சிந்தனை செய்வதுதான்
நமது செயல்களில் சிறந்த செயல்
விந்தைகள் விளைவிக்க
சிந்தனை வேறென விளம்புகிறார்
சிறப்புறும் சிந்தனை செயல்களில் செழிப்புறும்
நிந்தனை பெறும் சிந்தனை செயல்களில் வெறுப்புறும்

சிந்தனையில் சினம் கொள்பவன்
வரலாற்றில் வாழமாட்டான்
சிந்தனையை உயிர் ஆக்குபவன்
வரலாற்றில் வாழ்ந்திடுவான்
சிந்திக்க தூண்டுபவன் கிருஷ்ணபரமாவின் ஆதாரம்
சிந்திக்காமல் தூங்குபவன் கும்பகர்ணனின் அவதாரம்

அராலியூர், ப.தர்மகுமாரன்.

# அம்மா, மன்னித்து ஏற்றுக்கொள்!

அம்மா உலகம்
அம்மா அன்புப் பெட்டகம்
உண்ணும் உணவில் அம்மா
செய்யும் செயல்களில் அம்மா
தந்தையை இழந்த போது
கையில் எடுத்தவள் அம்மா
நானொரு வண்ணம் உருமாறினேன்

பள்ளிப்படிப்பு பள்ளத்தில் போனது
அம்மாவின் ஆசை நிராசை
சீட்டாக சிறகடித்தேன்
வட்டமிட்டு வாலிபர் கூட்டம்
கீட்டவிடாமல் பேயோட்டம்
வண்டொன்று சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்தது
ஏனோ உள்ளம் பறிபோனது
அம்மாவின் அறிவுரைகள் வேப்பங்காய்
அருவருத்தேன் அம்மாவை

நேற்றையவன் கரும்பானான்
கூட்டிச் சென்றான் ஆசையுடன் அறைக்கு
பேரதிர்ச்சி...!
அழுதென்ன?... தொழுதென்ன...?
மூவர் காமவெறிக்கு இரையானேன்
தாயின் நினைவுகள் கண்களில் ஆறாய்
எங்கே அம்மா இருக்கிறாய்?
நானும் வருகிறேன் உன்னைத்தேடி
மன்னித்து ஏற்றுக் கொள்

மானந்தன், அல்வாய்.

## மௌனத்தின் தேடல்- 731




### வரையும் வாக்குகள்

வயது முதிர்ந்த நிலையிலும்
வாக்குப் புள்ளடி போட்டு
சனநாயகத்தை காப்பாற்றுவது
பாராட்டப்பட
வேண்டியதொன்றே

தங்கத்தமிழன்,
காரைநகர்.

### வயது முதிர்ந்தது

எல்லா அரசுத் திட்டங்களும்
கடனில் தான் நடக்கிறது
பொருளாதாரம்–அது
அதல பாதாளம்
உற்பத்தி பூச்சியம்
முட்டையே இறக்குமதி
அரசியல்வாதிகள்
நக்கியே நாவிழந்தனர்
நானும் வாக்களித்தே
வயது முதிர்ந்தது

பி.மதுஷ்சன், தையிட்டி.

### அம்மாவின் அனுபவம்

விரலிலே மை பூசி
அடையாளப்படுத்திய அம்மா
எத்தனை தேர்தலில்
உங்கள் கரங்கள்
புள்ளடி இட்டதோ?
அனுபவித்த சுகம் என்னவோ?
கண்ணீரை வடித்த
அம்மாக்கள்
ஆயிரமாயிரம் எதுவானாலும் சரி
நமது உரிமை
வாக்குரிமைச் சுதந்திரத்தை
கைகளில் எடுப்போம்

அபி-குலமாலிகா,
சித்தன்கேணி.

### வாக்கும் மக்களும்

கைவிரலில் பூசிக் காயும்
மை போன்று தானின்றும்
தேர்தல் வாக்குறுதிகள் பல
தேர்தலில் பின் தாக்குப்பிடிப்பதில்லை
இதை நிலை நிறுத்த வேண்டியதன்
விழிப்புணர்வு மிகவும் தேவை
இல்லையென்றால் புள்ளடிகள்
பிழையாக மாறிவிடுவதுண்டு
இடைத் தேர்தல் வராவிட்டால்
இந்த உரிமையை மீண்டும் பெறவும்
வெந்து தணிந்த நாட்டை மீட்கவும்
ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும்

க.நாகராசா, நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 732



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### வாக்களிப்பு

வாாக்குச்சாவடியில்
பதிவேட்டில் பதிந்து வாக்களித்ததும்
மை பூசிய விரல்தனக் காட்டுவது வாக்கச் சீட்டில்
புள்ளடி போட்டு வாக்குப் பெட்டிக்குள்
போட்டாயிற்று எனும் அர்த்தத்திலா?

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

### எங்கள் எம்.பி

ஏதோ ஜனநாயகமாம் உரிமையாம்
நாங்களும் புள்ளடி போட்டோம்
எங்கள் எம்.பி தெரிவானார்
மதுக்கடை போமிற், சொகுசுக்கார்
சலுகை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல
அவரும் ஐம்பது கோடிக்கு ஏலம் போனார்

பிரமா யதுர்சன், கொக்குவில் இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: மாட்டுக்காரவேலன்.
வரிகள்: கண்ணதாஷன்.
பாடல்: எல்.ஆர்.ஈஸ்வரி, சௌந்தர்ராஜன்.



பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கெட்டா லட்சணமா
ஆட்டம் பார்த்து நோட்டம் பார்த்து
ஆளை முடிவு கட்டனுமா
பட்டிக்காடா .... பட்டணமா....
ரெண்டும் கெட்டா.... லட்சணமா...
பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கேட்டான் லட்சணமா

இந்த மாமா நேற்று வரை மாட்டுக்காரன் தாண்டி
இப்போ தாம்மா கோட்டும் சூட்டும் மாட்டி வந்தாரான்டி
பாக்கலாமா கிட்ட வந்து மூக்கும் முழியும் தோண்டி
இது காங்கேயம் ... காளையடி...
தும்ப விட்டு... வாலை பிடி...
எதுக்க நின்னா முட்டுமடி
கயத்த போட்டு கட்டுங்கடி

பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கெட்டா லட்சணமா....

என்னை மாமான்னு கூப்பிடுற மங்கையரே வாருமம்மா.....
ஏமாந்த சோனகிரி யாருன்னு பாருமம்மா....
பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கெட்டா லட்சணமா....

அம்மா நீங்க குனிஞ்சிருந்தா குட்டு போடுவீங்க
சும்மா வாங்க கொடுக்கட்டுமா
கன்னம் ரெண்டும் வீங்க
அம்மா நீங்க குனிஞ்சிருந்தா குட்டு போடுவீங்க
சும்மா வாங்க கொடுக்கட்டுமா
கன்னம் ரெண்டும் வீங்க
அய்யோ ஏங்க காலேஜ்–க்கு போனீங்களா தூங்க
அட ய டி உ தெரியுமா எடுத்து சொன்னா புரியுமா
பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கெட்டா லட்சணமா....

தட்டிக்கேட்க ஆளில்லாத குட்டிகள் தானோ
வெறும் வெட்டி பேச்சை பேசி வாயில் சுட்டிகள் தானோ
மரத்தை விட்டு நிலத்தில் வந்த மந்திகள் தானோ
மரத்தை விட்டு நிலத்தில் வந்த மந்திகள் தானோ
நீங்க மூக்கு வெளுத்து நாக்கு நீண்ட பிறவிகள் தானோ
அட காலு... அரை... முக்கால்... முழுசு....
எடத்தை பாத்து நின்னுக்கனும் எதுக்க நின்னா முட்டிக்னும்
பட்டிக்காடா பட்டணமா
ரெண்டும் கெட்டா லட்சணமா....

# கழிவு முகாமைத்தும்: யாழ்ப்பாணத்தின் நிலை

யாழ்ப்பாணம், அதன் வளமான கலாசார, பாரம்பரிய சமூகங்கள் மற்றும் பிரமிக்க வைக்கும் இயற்கை அழகுக்காக புகழ் பெற்றது. எவ்வாறாயினும், வளரும் நாடுகளில் உள்ள பல நகர்ப்புறங்களைப் போலவே, யாழ்ப்பாணமும் கழிவு நெருக்கடியால் பாதிப்பை எதிர்கொள்கிறது. நகரத்தில் மக்கள் தொகை மற்றும் தொழிற்துறையில் வளரும் போது, கழிவுகளின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை, மட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வு, உள்நாட்டு மோதலின் பின்விளைவுகள் உட்பட கழிவு நெருக்கடியை அதிகரிக்கச் செய்யும் பல்வேறு தனித்துவமான சவால்களை இந்தப் பிராந்தியம் எதிர்கொள்கிறது.

நகரமயமாக்கல் குடியிருப்புகளின் அடர்த்தியை அதிகரித்து, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை அதிகரிப்பதால் நகரத்தில் கழிவுகள் அதிகரிக்க வழிவகுக்கிறது. யாழ்ப்பாணத்தின் கழிவு நெருக்கடிக்கு முக்கிய காரணியாக விளங்குவது முழுமையான கழிவு முகாமைத்துவ முறைமை இன்மையாகும்.

இதனால் குடியிருப்பாளர்கள் திறந்த எரிப்பு அல்லது சட்ட விரோதமாக கொட்டுதல் போன்ற முறையற்ற அகற்றல் முறைகளை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். முறையற்ற கழிவு மேலாண்மையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அபாயங்கள் குறித்து பல மக்கள் அறிந்திருக்கவில்லை. இந்த விழிப்புணர்வு இல்லாமை, சமூகப் பொறுப்புணர்வின்மை உணர்வுடன் இணைந்து, பரவலான குப்பைகள் மற்றும் திறந்த வெளியில் கொட்டுவதற்கு வழி வகுத்தது.

கழிவுகளை எவ்வாறு பொறுப்புடன் நிர்வகிப்பது என்பது பற்றிய பொதுமக்களின் புரிதல் இன்மையானது பல சவாலைகளை ஏற்படுத்துகிறது. தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் பேக்கேஜிங் பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் பிற மக்காத கழிவுப் பொருட்கள் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்படாமல் போகும். தொழிற்சாலைக் கழிவுகள் பெரும்பாலும் வீட்டுக் கழிவுகளுடன் கலக்கப்படுகின்றன. இதனால் கழிவு நீரோடைகளை நிர்வகிப்பதில் மேலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

கூடுதலாக, பயன்பாடு அதிகரிப்பு ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் பிற மறுசுழற்சி செய்ய முடியாத பொருட்கள் இப்பகுதியில் கழிவு நிலையை மோசமாக்கியுள்ளன.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது யாழ்ப்பாணத்தின் உட்கட்டமைப்பு கடுமையாக சேதமடைந்தது. மேலும் போருக்குப் பிந்தைய மீட்சியின் பெரும்பகுதி அடிப்படைக் கட்டமைப்புகளை மீளக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளது. இருப்பினும், கழிவு மேலாண்மைக்கு குறைவான கவனம் செலுத்தப்படுகிறது.

கழிவு நெருக்கடிக்கான சாத்தியமான தீர்வுகளாக மேம்படுத்தப்பட்ட கழிவு சேகரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது, கழிவு சேகரிப்பு புள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, வழக்கமான சேகரிப்பு சேவைகளை உறுதி செய்தல் மற்றும் நவீன கழிவு செயலாக்க வசதிகளில் முதலீடு செய்வது ஆகியவை இதில் அடங்கும்.

உரம் தயாரிக்கும் வசதிகள் மற்றும் மறுசுழற்சி மையங்கள் போன்ற நவீன கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை உள்ளடக்கிய உட்கட்டமைப்பை மேம்படுத்துவது, குப்பைக் கிடங்குகளில் இருந்து கழிவுகளைத் திருப்பி, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க உதவும்.

அபராதங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் கழிவுகளை பிரிக்கும் சட்டங்களை அமுல்படுத்துதல் ஆகியவை பொறுப்பற்ற கழிவுகளை அகற்றுவதை குறைக்க உதவும். சுற்றுச்சூழலுக்கு போன்ற நிலையான நடைமுறைகளை கடைப்பிடிக்க வணிகங்களை ஊக்குவிக்கும் கொள்கைகள் கழிவு உற்பத்தியை கணிசமாகக் குறைக்கும்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவது கழிவு மேலாண்மைக்கான புதுமையான கொள்கை அணுகுமுறைகளுக்கு வழிவகுக்கும். பிளாஸ்டிக் மற்றும் பிற மக்காத பொருட்களுக்கு நிலையான மாற்றீடுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பது கழிவு உற்பத்தியை குறைப்பதில் ஒரு முக்கிய படியாகும்.

பிரச்சினை பலதரப்பட்டதாக இருந்தாலும், அது தீர்க்க முடியாதது அல்ல. போதிய உட்கட்டமைப்பு, பொது விழிப்புணர்வு இல் லாமை மற்றும் போதுமான ஒழுங்குமுறை அமுலாக்கம் போன்ற கழிவு மேலாண்மையின் மூலகாரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம், யாழ்ப்பாணமானது அதன் சுற்றுச்சூழல், பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார நல்வாழ்வைப் பாதுகாக்கும் நிலையான கழிவு மேலாண்மை அமைப்பை உருவாக்க முடியும்.

நவீன உட்கட்டமைப்பு மேம்பாடுகளை சமூகம் சார்ந்த முன்முயற்சிகள் மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்களுடன் ஒருங்கிணைத்து, கழிவு முகாமைத்துவத்திற்கான முழுமையான அணுகு முறையை யாழ்ப்பாணம் கடைப்பிடிப்பது அவசியமாகும். ஒருங்கிணைந்த முயற்சியின் மூலம் மட்டுமே நகரம் அதன் கழிவு நெருக்கடியை சமாளிக்க முடியும் மற்றும் அதன் குடியிருப்பாளர்களுக்கு தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் வளமான எதிர்காலத்தை உறுதி செய்ய முடியும்.

ஜீவரத்தினம் கஜீபா
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

417

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உடற்பயிற்சியில் இவ்வளவு நன்மைகளா?

உடற்பயிற்சி செய்வதால் உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இது உடலின் சக்தியை அதிகரிப்பதோடு பல நோய்கள் வராமல் தடுத்து ஆயுட்காலத்தையும் அதிகரிக்கிறது. உடற்பயிற்சி செய்வதால் மனமகிழ்வு ஏற்படுகிறது. தற்போது உடற்பருமன் அதிகரிப்பு என்பது பாரிய பிரச்சனையாக இருக்கிறது.

இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், அவர்கள் நிறைய உணவுகளை உண்பதோடு அதற்கேற்ற உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதே ஆகும். தொடர்ந்து தொலைபேசி, கணனி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களுடன் நேரத்தை செலவழிப்பதால், உடற்பயிற்சி செய்வது குறைகிறது. இதனால், உடற்பருமன் அதிகரிக்கிறது. உடற்பருமனை குறைப்பதற்கு உடற்பயிற்சி மிக அவசியமாகும். உடற்பயிற்சியானது, உடற்பருமனை குறைப்பதோடு மேலும் நிறை கூடாமல் தடுக்கிறது.

அடுத்ததாக, இந்த உடற்பயிற்சியானது இருதய நோய்கள் ஏற்படாமல் தடுக்கிறது. உடற்பயிற்சி செய்யும் போது, உடலில் நல்ல கொழுப்பு (Good cholesterol) அதிகரிப்பதோடு கூடாத கொழுப்பின் (Bad cholesterol) அளவு குறைகிறது. அதோடு, குருதி அமுக்கம் குறைவதோடு மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கிறது. உடற்பயிற்சி செய்யும் போது சக்தியின் அதிகமான கலோரிகள் எரிக்கப்படுவதால் உடலில், இரத்த குளுக்கோஸின் அளவு குறையும். அதேநேரம், Insulin சுரப்பும் அதிகமாக சுரக்கப்படும். இதனால் நீரிழிவு, Metabolic syndrome போன்ற நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

புகைத்தலில் இருந்து விடுபடுவதற்கு உடற்பயிற்சி உதவுகிறது. இது, புகைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை குறைப்பதோடு, புகைத்தலை விட்ட பின்னர் ஏற்படும் Withdrawal Symptoms ஐயும் குறைக்கும். உடற்பயிற்சி செய்வதால், உள சுகாதாரம் மேம்படும். மன மகிழ்வு ஏற்படும், மனச் சோர்வு குறையும், பதற்றம் குறையும் மற்றும் நினைவாற்றல் அதிகரிக்கும். உடற்பயிற்சி செய்யும்போது எலும்பு, தசை வலுவடையும். Osteoporosis ஏற்படுவது குறையும்.

சில வகை புற்றுநோய்கள் ஏற்படுவதையும் உடற்பயிற்சி குறைக்கிறது. உதாரணமாக, குடல், நுரையீரல், கர்ப்பப்பை மற்றும் மார்பக புற்றுநோய்கள் ஏற்படுவதை குறைக்கிறது. வயதானவர்கள் உடற்பயிற்சியை கிரமமாக செய்து வருவதால், அவர்கள் விழும் நிலை குறைவடைகிறது.

தற்போது பெரும்பாலானவர்களுக்கு நித்திரை பிரச்சனை காணப்படுகின்றது. உடற்பயிற்சி செய்வதால், இந்த நித்திரை பிரச்சனை குறைவடைந்து, அவர்கள் நீண்ட நேரம் தூங்கக் கூடியதாக இருக்கும். ஆழ்ந்த உறக்கத்திற்கும் உடற்பயிற்சி உதவுகிறது. அடுத்ததாக, உடற்பயிற்சி செய்வதால் இனப் பெருக்க தொழிற்பாடுகள் விருத்தியடையும்.

தற்போது ஆண்களில் ஆண்மை குறைபாடும், பெண்களில் இனப் பெருக்கச் செயற்பாடுகளில் நாட்டமற்ற தன்மையும் முக்கியமான பிரச்சினைகளாக காணப்படுகின்றன. இவை இரண்டையும் உடற்பயிற்சி மூலம் நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

உடற்பயிற்சி இருதய மற்றும் புற்றுநோய்கள் ஏற்படாமல் தடுப்பதால் ஆயுட்காலத்தை அதிகரிக்கிறது. பெரும்பாலானவர்கள் உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என கூறுவார்கள். அவ்வாறானவர்கள், தங்கள் நாளாந்த வாழ்வில் செய்யக் கூடிய செயற்பாடுகளை உடற்பயிற்சியாக செய்யலாம். உதாரணமாக, மின்னுயர்த்தியை பயன்படுத்தாமல் படியேறிச் செல்லலாம், வீட்டு வேலைகளைச் செய்யலாம், சிறுதூரப் பயணம் செல்லும் போது நடந்து செல்லலாம் மற்றும் ஏனைய செயற்பாடுகளை உடற்பயிற்சியாக செய்யலாம். உடற்பயிற்சி செய்யும் போது என்ன செய்தோம், எவ்வளவு நேரம் செய்தோம் என ஒரு பதிவைப் பேணுவது நல்லது. உடற்பயிற்சியானது, புத்துணர்ச்சி, மகிழ்ச்சியை தரக்கூடியது.



யோகாசனம் செய்வதும் ஒரு வகை உடற்பயிற்சியாகும். இது மனநலனை மேம்படுத்தக் கூடியது. இவ்வகையான உடற்பயிற்சியால் முதுமையான தோற்றம் ஏற்படுவதை தடுக்கலாம் மற்றும் நீண்ட கால உடல் வலியை குறைக்கலாம். பொதுவாக ஒரு வாரத்திற்கு 150 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் என்றபடி குறைந்தது 5 நாட்களிற்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சியில் இரண்டு வகை உண்டு. மிதமான உடற்பயிற்சி (Moderate intensity exercise) இற்கு, வேகமாக நடத்தல், சைக்கிளோடுதல் என்பவற்றைச் செய்யலாம்.

கடினமான உடற்பயிற்சி (Vigorous exercise) எனும் போது, ஓடுதல், strength training அதாவது, Weight lifting போன்றவற்றை செய்யலாம். உடற்பயிற்சியால் இவ்வளவு நன்மைகள் கிடைப்பதால், தினமும் தவறாமல் உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம்.

**Dr. கி. சிவராமன்**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## எமது முயற்சிகளின் பொழுது....

குடும்ப சமூக அமைதிக்கான நெறிப்படுதல்களுக்கான முயற்சிகள் ஒரு நுட்பமான தொடர் போராட்டமே. எமது கைதவறி பொருட்கள் விழுந்து உடைந்து விடும் பொழுது மனவேதனை கொள்கிறோம். ஆனால் எமது "நாதவறி" வார்த்தைகள் தவறி உறவுகள் குடும்பங்கள் உடைந்து விடும் பொழுது அதன் தாக்கத்தை உணர மறந்துவிடுகிறோம்.

"நா" காக்க முயற்சிப்பதும் ஒரு பெரு முயற்சியே.

சில உண்மைகள் உணரப்பட உணர்த்தப்பட காலதாமதம் ஆகலாம். உண்மை நிலை உணரப்படும் வரை உணர்த்தப் படும்வரை

அது "பொய்" போலத்தோன்றுவது ஒன்றும் புதிர் அல்ல, புதிதல்ல. அதனை உணர்த்த எடுக்கும் முயற்சிகள் சிலசமயம் இலகுவானதாக இருக்காது. இருந்தும் அதற்காக முயற்சிக்காமல் இருக்க முடியாது. எமது முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் வெற்றிபெறுவோம் என்று எம்மை நாம் நம்பாதபொழுது பிறர் எம்மை நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எமது முயற்சியின் பொழுது பல சவால்கள் முளைவிடும். இது சர்வநிச்சயமானது. அந்த சவால்கள் தான் எம்மை சரியான பாதையில் நெறிப்படுத்தும்

-வழி வாய்க்கால்களாக அமையும். எனவே சவால்களை எதிர்கொள்ள முயலாமல் இருந்து விட முடியாது.

பிறரின் உண்மையான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்போமாயின் எமது முயற்சிகளின் வெற்றிக்காகவும் பல கரங்கள் ஒன்றிணையும். முயற்சிகள் திருவினையாக்கும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது மருத்துவ நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்-2025
## கரைச்சி பிரதேசசபை- கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2025.01.01- 2025.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 2024.09.23- 2024.10.14**
**(அலுவகை நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :-2024.10.15 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி**

**கேள்வி திறக்கும் திகதி :-2024.10.15 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி**

**கேள்விதிறக்கும் இடம் :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2024.10.15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் **2024.10.15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன், கருவாடு, முட்டை | 50,000.00 | 1,000.00 | 4,143,700.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 100,000.00 | 1,000.00 | 7,370,000.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 50,000.00 | 1,000.00 | 3,900,600.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 100,000.00 | 1,000.00 | 7,382,100.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் பாதுகாப்பு நிலையம் | 60,000.00 | 1,000.00 | 4,719,000.00 |
| 6 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 60,000.00 | 1,000.00 | 4,763,220.00 |
| 7 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,446,750.00 |
| 8 | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,065,600.00 |
| 9 | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 1,000.00 | 1,125,300.00 |
| 10 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 45,000.00 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்காவில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 851,000.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | 85,000.00 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 16,935.58 |
| 4 | கிளிநொச்சி சிறுவர்பூங்காவில் உள்ள அழகுக்கலையகம் | 1,000.00 | 1,000.00 | 13,846.99 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 77,000.00 |
| 2 | பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,662,112.10 |
| 3 | பரந்தன் சந்தை கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 562,100.00 |
| 4 | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 1,000.00 | 104,500.00 |
| 5 | பொது மலசலகூடம் பரந்தன் | 1,000.00 | 1,000.00 | 24,000.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 3,000.00 | 1,000.00 | 231,000.00 |
| 2 | வட்டக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 704,000.00 |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 6,000.00 | 1,000.00 | 461,077.31 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 228,075.75 |
| 5 | இராமநாதபுரம் கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 149,820.00 |
| 6 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 61,600.00 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி. | 1,000.00 | 1,000.00 | 139,150.00 |
| 2 | இரணைமடு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,591,700.00 |
| 3 | இரணைமடுசந்தை கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 544,610.00 |
| | கனகாம்பிகைக்குளம் | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 3,300.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 275,000.00 |
| 2 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 7,700.00 |
| 3 | D10உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 264,000.00 |
| 4 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 152,420.23 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | 225,500.00 |
| 2 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 684,200.00 |
| 3 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 451,000.00 |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 115,500.00 |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 574,200.00 |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 171,600.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 26,848.18 |
| 2 | கல்லாறு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 13,000.00 |
| | பொதுச்சந்தை- ஜெயந்திநகர் | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 657,250.00 |
| 2 | ஜெயந்திநகர் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 330,000.00 |
| | பொதுச்சந்தை- ஊற்றுப்புலம் | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 259,600.00 |
| | பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான் | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 151,251.10 |
| | வன்னேரிக்குளம் | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 27,613.61 |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 45,650.00 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 180,400.00 |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 23,547.34 |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 47,850.00 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 155,900.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 123,200.00 |

### நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது இருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நாடத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதி வேலைநாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்ததவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு.ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம், மட்டுமே அறவிடமுடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்த மானிப் பத்திரிகையின் (அதி விசேஷமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
17. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை செயலாளரினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
19. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
20. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.


**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-1226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதித் தேர்தல்- 2024

## வரிசையில் காத்திருந்து வாக்களித்தார் ஜனாதிபதி




2024 ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க றோயல் கல்லூரியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கினை பதிவு செய்தார். (ந்-6)

## வாக்கினை பதிவிட்டார் எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பில் உள்ள ராஜகிரிய கொடுவேகொட விவேகராம புராண விகாரையிலுள்ள பாடசாலையில் வாக்களித்தார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச.

### அம்பாந்தோட்டையில் வாக்கை பதிவிட்டார் நாமல்



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை தொகுதியில் உள்ள வீரகெட்டிய டி.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் தனது வாக்கை அளித்தார்.

### வாக்களித்தார் அநுரகுமார



பஞ்சிகாவத்தை அபேசிங்ஹாராமய விகாரையில் சயிகோஜி முன்பள்ளி வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கினை பதிவிட்டார் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க.

### வாக்கினை பதிவிட்டார் சிறீதரன் எம்.பி



பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வட்டக்கச்சி மாயனூர் வித்தியாலயத்திலே தனது வாக்கினை பதிவு செய்திருந்தார்.

### வாக்களித்தார் அரியநேத்திரன்



தமிழ் பொதுக் கட்டமைப்பின் கீழ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்ற பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயத்தில் தமது வாக்கினைப் பதிவு செய்தார்.















(படங்கள்- சிவசாந்தன், ஜோசப்நயன்,சதீஸ்,வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொருபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாற்றத்தை நோக்கியதாக மக்களின் வாக்களிப்பு...

ஜனாதிபதித் தேர்தல் சுமுகமாக நடந்தேறியுள்ளது. நாடு முழுமையிலும் 72 சதவீதத்துக்கு மேலாக வாக்குகள் பதிவாகியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது 11 சதவீத வாக்குகள் வீழ்ச்சி கண்டுள்ளன.

இதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்களும் கடந்த காலங்களில் தாம் நம்பி வாக்களித்தவர்கள் நடந்து கொண்ட முறைகளும் தேர்தல் வெறுப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

எதுஎவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் சுமுகமாக நடந்தேறியுள்ளமை மன ஆறுதலைத் தருகிறது.

அதேநேரம் வாக்குகள் எண்ணப்பட்டு உத்தியோகபூர்வமான பெறுபேறுகள் வெளியாகும் வரை எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது அனைவரதும் கடமையாகும்.

இங்குதான் பொலிஸாரும் முப்படைகளும் நேர்மையாகத் தமது கடமையை ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆம், தேர்தல் முடிவுகள் ஒரு மாற்றத்தை நோக்கியதாக அமைகிறது.

எனவே மாற்றத்தை விரும்பாத தீய சக்திகள் நாட்டில் கலவரத்தை ஏற்படுத்த முற்படலாம்.

அத்தகைய கலவரங்களை தீய அரசியல் சக்திகள் தூண்டிவிடலாம்.

எனவே பொறுப்பு வாய்ந்த அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

அதிலும் தேர்தல்கள் ஆணைக்குழு தனக்கு இருக்கக்கூடிய அத்தனை அதிகாரங்களையும் பயன்படுத்தி நாட்டில் அமைதியையும் சுமுகமான நிலைமையையும் ஏற்படுத்த வேண்டும்.

இது விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கலாம்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர் மக்களின் மனநிலையை உணர்ந்து தனது ஆட்சித் தலைமையை வழிநடத்த வேண்டும்.

ஆம், நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதன் காரணமாக ஏழைக் குடும்பங்கள் அன்றாடச் சீவியத்துக்கே அல்லாடுகின்றன.

இந்த நிலை மாற வேண்டும். ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அதேசமயம் நாட்டில் நீண்டு செல்கின்ற இனவாத, மதவாதப் பெரு நோய்க்கு முடிவு கட்டியே ஆக வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இலங்கையின் எதிர்காலத்தை வளமானதாக ஆக்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

தவிர, இந்த நாட்டில் ஊழல் செய்த – தேசிய சொத்துக்களைக் கபளீகரம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அந்த சொத்துக்கள் மீளவும் அரச சொத்தாக ஆக்கப்படுவதும் அவசியம்.

இதனைப் புதிய ஜனாதிபதி செய்ய வேண்டும். அதற்காகவே மக்கள் தங்கள் வாக்குகளை அவருக்கு வழங்கியுள்ளனர்.

# அமைதியாக தேர்தல் வெற்றியை மக்கள் கொண்டாட வேண்டும்

## அநுரகுமார திசாநாயக்க

ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து வன்முறைகள் இன்றி அமைதியான முறையில் தேர்தல் வெற்றியை மக்கள் கொண்டாட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பஞ்சிகாவத்தை சைக்கோஜி பாலர் பாடசாலையில் வாக்களித்தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அமைதியான முறையில் வன்முறைகளின்றி மோதல் இன்றி தேர்தல் இடம்பெற்றது.

நாட்டில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் இந்த தேர்தல் அமையப்பெறும். இலங்கை வரலாற்றில் இந்த தேர்தல் மிக்வும் முக்கியமானது.

தேர்தல் வெற்றியின் பின்னரும் அமைதியாக செயற்பட வேண்டும். எமது நாட்டிற்கு புதிய அரசியல் கலாசாரம் ஒன்றே தேவைப்படுகின்றது.ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படவேண்டும்.

எனவே அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வன்முறைகள் இன்றி தேர்தல் வெற்றியை மக்கள் கொண்டாட வேண்டும். ஜனாதிபதி ஜனநாயக விரோத செயற்பாடுகளை முன்னெடுக்க மாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது.

தேர்தலில் வெற்றி பெறும் ஜனாதிபதியிடம் கடமைகளை ஒப்படைத்துவிட்டு அவர் ஓய்வு பெறுவார் என நினைக்கின்றோம் இவ்வாறு அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பெண் சட்டத்தரணி கொழும்பில் படுகொலை

கொழும்பில் பெண் சட்டத்தரணி ஒருவர் கழுத்தறுத்து படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு நுகேகொடவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் முத்து ஆர்த்துரே ஜயனி டி சில்வா (வயது 35) எனவும், உயிரிழந்த சட்டத்தரணியின் கீழ்பணிபுரிந்த சாரதியால் கொல்லப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மாத்தறை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவரை கைது செய்வதற்காக மிரிஹான தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

## அல்வாய் – குருக்கட்டு பதியுறை அரசடிப் பிள்ளையாருக்கு 1008 சங்காபிஷேகம்

(அல்வாய்)

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து இடம்பெற்ற மண்டலாபிஷேக பூர்த்தியாக விநாயகப் பெருமானுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 1008 சங்குகளினால் சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு குச்சம் ஞான வைரவர் ஆலய த்தில் இருந்து பால்குட பவனி ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும் அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேக பூஜைகளும் 1008 சங்காபிஷேகமும் இடம் பெறும். மாலை 6 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூஜை இடம் பெற்று திருவூஞ்சல் உற் சவம் நடைபெற்றதனை தொடர்ந்து எம் பெருமான் இரு வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (ம-7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாள் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 08.00 மணிக்கு 108 சங்கு வைத்து சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து, நண்பகல் 12.00 மணிக்கு எம்பெருமானின் புகழ் கூறும் புதிய பாடல் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா ஐயாத்துரை கண்ணா தெரிவித்துள்ளார். (ம-7)

## கிளிநொச்சியில் விபத்து இளம் குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி மின்சார சபைக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த இளங்குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரத்தை சேர்ந்த ஜெயக்குமார் கவிதரன் (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 20ஆம் திகதி இரவு 8:55 மணியளவில் வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் இருவரை ஏற்றிக்கொண்டு சென்றபோது மின்சார சபைக்கு முன்பாக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது பட்டா ரக வாகனத்துடன் மோதுண்டதில் இருவரும் படுகாயம் அடைந்திருந்தனர்.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற குறித்தநபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை(21) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபருக்கு ஒன்றரை மாதத்தில் குழந்தை ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சாவகச்சேரியில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி தனங்கிளப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நந்தகுமார் செந்தூரன் (வயது- 41) என்பவரே உயிரிழந்தவராவார்.

கோவிலாக்கண்டிப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்று நடத்தி வரும் அவர் பூநகரி- யாழ்ப்பாண வீதியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது காலை ஏழு முப்பது மணியளவில் அவர் பயணித்த துவிச்சக்கர வண்டியை அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் வண்டியின் முன்பக்க கண்ணாடி மோதுண்டதில் அவர் தூக்கி வீசப்பட்டார்.

இதில் மயக்கம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த் நிலையில் நேற்று சனிக்கிழமை(21) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு வசதிகள் சீரின்மையால் குறிகாட்டுவானில் காத்திருந்த மக்கள்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளி மாவட்டங்களிலிருந்து நெடுந்தீவிற்கு வருகை தந்த நூற்றுக்கணக்கான மக்கள் படகு வசதிகள் சீரின்மையால் குறிகாட்டுவான் இறங்குதுறையில் காத்திருந்தனர்.

வழக்கமாக காலை 8 மணிக்கு சேவையில் ஈடுபடும் படகில் முழுமையாக பயனாளிகளை ஏற்ற முடியாதன் காரணமாக ஏனையோர் இறங்குதுறையில் காத்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டதையடுத்து மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (6)

# தேர்தல் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் சுகவீனம் காரணமாக பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று பிற்பகல் உயிரிழந்ததாக புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை புலஸ்திபுர விஜிதா ஆரம்பப் பாடசாலையின் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திடீர் மரணம் தொடர்பில் பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வாவின் ஆலோசனையின் பேரில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)


Government TVEC Approved

தாதியர் பயிற்சிப்பாடசாலை

FLORENCE NIGHHTINGAL

தாதியர் பயிற்சிநெறி - 2024

நுழைவுத் தகைமை

- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் & A/L
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்
- மற்றும் இலகுவான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்



கற்கை நிலையங்கள்

❖மருதனார்மடம் ❖நெல்லியடி ❖சாவகச்சேரி

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்

VIBER 077 718 6438 | WHATSAPP 077 482 4473 | T.P.NO 077 718 6438

நிர்வாகம்

புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை. (1052)


# யாழில் வாக்குச் சீட்டை கிழித்த இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் வாக்களிக்க வந்த இளைஞன் ஒருவர் வாக்கு சீட்டை கிழித்ததை அடுத்து, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நேற்று வாக்களிக்க சென்ற இளைஞன், தனது வாக்காளர் அட்டையை , காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்தி, வாக்குச் சீட்டினை கைகளில் பெற்ற பின்னர் வாக்களிக்காது, அதனை கிழித்துள்ளார்.

அதனை அங்கிருந்த அதி காரிகள் கவனித்து, பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின் போது, இளைஞன் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதல் தடவை எனத் தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (6-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3227


### விதுசன்




### அக்ஷயன்




### தனுசியா




### யாதவன்




### திலக்ஷிகா




### மயூரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மறவன்புலவில்...

யைச் சேர்ந்த 67 வயதான நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற சமயம் தவறி நீருக்குள் விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபருடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## அரசாங்க...

லுவல்கள் அமைச்சின் செயலாளரை மேற்கோள்காட்டி அர சாங்கத் தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நிலையில் மேற்படி விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீர்வேலியில்...

வம் இடம்பெற்றுள்ளது.

இதில் 65 வயதான பெண்ணொருவரே உயிரிழந்தவராவார்.

வீடு தீப்பற்றி எரிவதனைக் கண்ணுற்ற அயலவர்கள் தீயினை அணைக்க முற்பட்டதுடன், யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினருக்கும் அறிவித்ததை அடுத்து தீயணைப்பு படையினர் விரைந்து வந்து, தீயினை அணைத்தனர்.

எனினும் வீட்டில் இருந்த பெண் உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் தீ பற்றிய நிலையில் வீட்டின் வெளியே காணப்பட்டுள்ளது.

சிலிண்டர் வெடித்து தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது நாசகார செயலா? என தெரியாத நிலையில் யாழ்ப்பாண தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## யாழ்.போதனா...

யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த செல்வராஜா றெஜினி (வயது-19) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் சுத்திகரிப்பு தொழிலாளியாக கடமை செய்து வரும் மேற்படி யுவதியின் தந்தை ஆறு மாதங்களுக்கு முன்னர் இயற்கை எய்தியுள்ளார். இதனால் மனமுடைந்து எந்நேரமும் யோசனையில் இருந்து வந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 31ஆம் திகதி நான்காம் மாடியில் யோசனையில் ஈடுபட்டிருந்தபோது அவர் தவறி விழுந்துள்ளார்.

படுகாயமடைந்த அவர்யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## நெடுந்தீவிலி...

நெடுந்தீவில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் இருந்து, வாக்குப் பெட்டிகளை கையளிப்பதற்கான உலங்குவானூர்தி பி.ப 05.10 மணிக்கு வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் தரையிறங்கியது.

நெடுந்தீவிலிருந்து உலங்கு வானூர்தி மூலம் வருகை தந்த சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும், விமானிகளையும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ் மற்றும் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜெ.ஹாலிங்க ஜெயசிங்க ஆகியோர் வரவேற்றார்கள். (ம-7,33)

## 72 வீதங்களுக்கு...

மொனராகலை 77%, பொலநறுவை 78%, இரத்தினபுரி 75%, கம்பஹா 80%, கொழும்பு 75%, - 80%, அம்பாறை 70%, புத்தளம் 78%, களுத்துறை 75%, காலி 74%, வவுனியா 72%, பதுளை 73%, அம்பாந்தோட்டை 78%, கேகாலை 75%, அநுராதபுரம் 75%, மட்டக்களப்பு 69%, குருநாகல் 75%, திருகோணமலை 76%, [illegible] 78%, - 80%, மாத்தளை 74 % (ம-7)

## காணாமல்...

வைஷ்ணவின் சடலம் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தம் இடம்பெற்றது.

இதன்போது கடலில் நீராடிய அம்பன், குடத்தனையைச் சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது-54) என்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

அதேவேளை தம்பு வீதி, நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த தயாசீலன் வைஷ்ணவன் (வயது- 28) என்ற ஆசிரியர் கடலில் காணாமல் போயிருந்தார்.

இது தொடர்பில் அவரின் தாயாரினால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று சனிக்கிழமை கடலுக்கு தொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் இந்திய எல்லைக் கடற்பகுதியில் ஆசிரியரின் சடலம் மிதப்பதைக் கண்டு அதனை மீட்டு கரைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

பருத்தித்துறை பதில் நீதவான் பா.சுப்பிரமணியம் கடற்கரைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினர். (ம-7,60)

## ஊர...

அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது அமைதியான சூழல் நிலவினாலும் மக்களின் மேலதிகப் பாதுகாப்புக் கருதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் மக்களை தங்களது இருப்பிடங்களிலேயே நேரத்தை செலவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கின்ற தரப்பினர் தங்களது நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள ஆவணத்தை அல்லது கடிதத்தை ஊரடங்கு காலப்பிரவேச ஆவணமாகப் பயன்படுத்த முடியும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ம-7)

## பாரா...

கள் தனித்தனியாக கலந்துரையாடியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ம-7)

## கட்டுநாயக்க...

கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் மற்றும் வாகனங்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## முன்னிலையில்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணியுடன் நிறைவடைந்தது.

நாடளாவிய ரீதியில் சுமார் 72 சத வீதத்துக்கு அதிகமாக வாக்களிப்பு இடம்பெற்றிருந்தது.

மிகவும் அமைதியாக நடைபெற்ற இத்தேர்தலில் காலி, குருநாகல், கேகாலை, கண்டி, பதுளை, அநுராதபுரம், கொழும்பு, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தபால்மூல வாக்குப் பதிவில் அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் உள்ளார். (ம-7)

*(இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி)*

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.09.21
சீட்டிழுப்பு இலக்கம் 5603
U 1 5 6 4 1 3
அத சம்பத
U 6 4 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 178

தன நிதானய
திகதி - 2024.09.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1633
R 02 61 67 82 R
57529

மெகா பவர்
திகதி 21/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1951
M 04 06 40 60 75
01829

லக்கி 7 VIP
திகதி 2024.09.21
சீட்டிழுப்பு இலக்கம் 0429
Q 3 8 7 1 0 6 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3845
சீட்டிழுப்பு திகதி 21.09.2024
V 02 48 70 80
V 35505

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.21
சீட்டிழுப்பு 912
கும்பம் 17 22 46 62 கும்பம்
71447 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.09.2024 வெற்றி வாரம் 311 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து O
2 8 6 9 5 3
59786
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,441,388.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2577 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 21.09.2024 தினம் சனிக்கிழமை
14 19 23 43 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,960,414.40

சனிதா
திகதி 2024.09.21 வெற்றி வாரம் 4738 வர்ணம் இளம் பச்சை
26 40 42 67 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,689,908.00
76149

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4289 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.21 தினம் சனிக்கிழமை
02 05 08 38
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,781,551.60
102087

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 14 07 15 18 33
1753 சிவப்பு 21.09.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 546,216,978.60

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2403
சீட்டிழுப்பு திகதி : 2024.09.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,669,224.80
ADA KOTIPATHI
10 11 23 28 A
470239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

**1%**
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (1908)

**075 033 6759**

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (354)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வேலைவாய்ப்பு

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர்மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

- கூலி - ஆண் (வயது: 35 - 45)
- Security - பாதுகாவலர் - ஆண் (வயது: 40 - 60)

ஹப்பி சூப்பர்மாக்கட் - உரும்பிராய் (352)

**070 508 6855**


# 10 பேர் கைது

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறு சம்பவங்கள் பதிவாகி 10 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் டிஐஜி சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தல் இது வாகும் என PAFRAL அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ். K.K.S மயிலிட்டியில் 17 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 7 பரப்பாகவும் விற்கலாம். (1999)

தொடர்புகளுக்கு :

**075 521 3533**

## விற்பனைக்கு

- ராக்கை 7
- Grocery Items

விற்பனைக்கு உண்டு. (361)

தொடர்புகளுக்கு :

**075 214 4682**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER. (1819)

ENGLISH 30% Special offer for all the courses

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## இப்பொழுது விற்பனையில்

முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

இலவச சிறுவர் சஞ்சிகை இணைக்கப்பட்டுள்ளது

# யாழ் எக்ஸ்பிரஸ்

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், இஸ்லாம், இந்து சமயம், கத்தோலிக்க திருமறை ஆகிய பாடங்கள் உள்ளடங்கிய

3 ஆந் தவணை மாதிரி வினாத்தாள்கள்

தரம் 1 2 3 4

விலை 250/-

(C-1231)

Published By : UNILANKA'S PUBLICATION

No. 326, Sea Street, Colombo - 11. Hotline : 0776258778 / 0777220324 What'sapp : 0776258778 / 0777220324

எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள். (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College, 49A, Chapel Street, Jaffna. (C-1232)

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas, Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1232)

## காணி விற்பனைக்கு

புலோலி - கொடிகாமம் வீதியில் காணி விற்பனைக்கு உண்டு. 4 பரப்பு (1970)

தொடர்புகளுக்கு :

**077 160 7635**

## தேவை

தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பிப்பதற்கு மூன்று அறை கொண்டவீடு அல்லது 2500 sqft கொண்ட இடம் தேவை. K.K.S வீதி அல்லது அதன் அருகில் இருப்பது விரும்பத்தக்கது. (359)

**076 897 6665**
**070 686 7695**

## புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.09.2024

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு

**aat (Sri Lanka) (AA1, AA 2, AA3)**

G.C.E. O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (C-1233)

Certificate Course in English

Further Details : Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna.

021 222 3382/ 021 222 9149

- 077 440 5917

## இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள்

2025. தரம் 6 மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் அடிப்படையில் இருந்து கற்பிக்கப் படும்.


ஆரம்பம் :- 23.09.2024
நேரம் :- மாலை 3.00 மணி
இடம் :- இலங்கை வேந்தன் திருமண மண்டபம் அருகில். நீராவியடி, யாழ்ப்பாணம். (1960)

தரம் 6,7,8,9,10,11 வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:

**077 214 0220**
**077 990 6867**


## மரண அறிவித்தல்



# சோதியர் கிருஸ்ணன் (ராதா)

### (கட்டட ஒப்பந்தகாரர்)

கொக்குவில் காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்திரகாளி கோவிலடி மற்றும் தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட சோதியர் கிருஸ்ணன் (ராதா) 20.09.2024 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோதியர் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லர் - செல்வம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகம்மாவின் (வேவி) பாசமிகு கணவரும் சுரேந்திரன் (லண்டன்), சர்மிளா (ஆசா), மிருத்திகா (மித்தா), கிருசா (அயிதா), கஸ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காது (லண்டன்), றமேஸ், மதுசான், சுயாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆதி, காவியா, கபிஸ்ணா, கனிஸ்கா, சிறீநிகேஸ், ஆத்வீக் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2024) திங்கட்கிழமை தெகிவளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10 மணிக்கு தெகிவளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தெகிவளை,
கொழும்பு. (364)

அன்னார் குடும்பத்தினர்.


## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 243/= | Max 3Kg |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 277/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 379/= | |
| 1 Kg prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 284/= | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 799/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 740/= | |
| 1 Kg மல்லி | - 380/= | |
| 1 Kg கீரி சம்பா | - 250/= | |
| 01 Ocean மீன் ரின் | - 340/= | ~~500/=~~ |
| 01 சன் பப்படம் | - 185/= | ~~225/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | ~~1120/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~165/=~~ |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |

Max - 05
400g Anchor
1005/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

வீதி, உரும்பிராய் சந்தி. (354)

Happy Supermarket 0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.